
Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மங்கள நிகழ்வுகளுக்கு
மங்களகரமான ஸ்தாபனம்
முற்றிலும் நவீன மயப்படுத்தி
குளிரூட்டப்பட்ட காட்சியறை
குமரகுரு
புடவை, அழகுப்பொருட்கள் வாணியம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 23 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 29 (07.07.2005) வியாழக்கிழமை இதழ்:280

## சுதந்திர தமிழீழத்தை உருவாக்குவதே கரும்புலிகளுக்குச் செலுத்தும் கடன்!

### புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான்



கிளிநொச்சி

கரும்புலி வீரர்களின் இறுதி விருப்பமான - தேச விடுதலையைப் பெற்று, தமிழீழ தேசத்தை, சுதந்திர பூமியாக உருவாக்குவதே கரும்புலிகளின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையுமென்று புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட கரும்புலிகள் நாளை முன்னிட்டு, சர்வதேச தமிழ் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் எல்லோரும் தமிழரென்று தலை நிமிர்ந்து நிற்பதற்காக தம்மைத் தாமே தற்கொடை செய்து கொண்ட கரும்புலி மாவீரர்களின் நினைவுநாள் இதுவாகும். "பலவீனமான எமது இனத்தின் பலமான ஆயுதங்களாக கரும்புலிகளை உருவாக்கினேன்" எனத் தலைவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் உள்ள அகதிகளை கப்பலில் அழைத்துவர ஏற்பாடு!

கொழும்பு

இந்தியாவில் பல வருடங்களாகத் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை கப்பல் மூலம் இலங்கைக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களில் குறிப்பிட்ட அளவிலான மக்கள் 2002ஆம் ஆண்டு புலிகளுக்கும், படையினருக்கும் இடையே (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை மாவட்ட விளையாட்டுப் போட்டியில்

# சிங்களக் காடையர்கள் அட்டகாசம்; அத்துமீறி சிங்கக்கொடி ஏற்றினர்!

### கலவரத்தில் ஈடுபடவும் முயற்சி

திருகோணமலை

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை - அங்கு அத்துமீறி நுழைந்த சிங்களக் காடையர் சிங்கக் கொடியை ஏற்றியதால், பதற்ற நிலை ஏற்பட்டதையடுத்து போட்டிகள் இடைநிறுத்தப்பட்டன.

இதன்பின்னர் சிங்களக் காடையர்களும், மாணவர்களும், மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தையடுத்து, மாவட்ட மட்டப் போட்டிகள் இடைநிறுத்தப்பட்டதுடன், முதல் இரண்டு இடங்களைப்பெற்ற மாணவர்கள் அனைவரையும் மாகாணமட்டப் போட்டியில் சேர்த்துக் கொள்வதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தியாகலிங்கம் அறிவித்தார்.

திருகோணமலை வலயப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் மாவட்டமட்ட போட்டி நேற்றுக்காலை விபுலானந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை, மைதானத்தினுள் அத்துமீறி நுழைந்த சிங்களக் காடையர்கள் சிங்கக் கொடி ஏற்றப்படாது நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், மைதானத்தின் நடுப்பகுதியில் சிங்கக் கொடியை ஏற்றி தேசிய கீதம் இசைத்தனர்.

இதனையடுத்து, போட்டியில் பங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஈழத் தமிழர்கள் விடுதலைக்கு எதிராக சி. பி. ஐ. வழக்கு!

கொழும்பு

## இனிமேலும் தமிழ் மக்களால் பொறுத்துக்கொள்ள முடியாது!

# இனிமேலும் தமிழ் மக்களால் பொறுத்துக்கொள்ள முடியாது!


## 3000 கிராமியப் படையினர் மத்தியில் கேணல் சொர்ணம்!



திருகோணமலை —

தமிழ்மக்கள் - இனிமேலும் அவலங்களைச் சந்திக்கக்கூடாது. நாங்கள் எதற்கும் தயாராகவே உள்ளோம். மாற்றத்தை ஏற்படுத்த - கிராமங்களைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று திருகோணலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

மூதூர் - சேனையூர் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் - மூதூர் பிரதேசத்தில் ஆயுதப் பயிற்சி பெற்ற 3000 ஆயிரம் கிராமியப் படையினர் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## 2 ஈழத் தமிழர்கள் விடுதலைக்கு எதிராக சி. பி. ஐ. வழக்கு!

கொழும்பு —

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதான இலங்கைத் தமிழர்களான லிங்கம், வசந்தன் ஆகியோரை விடுதலை செய்து இலங்கை செல்ல அனுமதிக்குமாறு சென்னை மேல்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து சி.பி.ஐ. இயக்குநர் தலைமையில் செயற்பட்டு வரும் நல்லொழுக்க கண்காணிப்பு நிலையம் உயர்நீதிமன்றில் சிறப்பு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

லிங்கமும், வசந்தனும் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். ராஜீவ் கொலையில் இருவரும் முக்கிய பங்காற்றியுள்ளனர். இது தவிர வெளிநாட்டு விதிமுறைகளை மீறி எவ்வித ஆதாரமும் இல்லாமல் இந்தியாவிற்கு வந்துள்ளனர்.

ஒற்றைக் கண் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பொலிஸார் மீது கல்முனையில் துப்பாக்கிச்சூடு!

### ஒருவர் பலி; மற்றொருவர் படுகாயம்!



மட்டக்களப்பு —

அம்பாறை - கல்முனை நகரில் நேற்றுக் காலை தேசிய புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

காரைதீவு விசேட அதிரடிப்படையுடன் இணைந்து சேவையாற்றிவந்த தேசிய புலனாய்வுப்.பணியகத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் - கல்முனை பொலிஸ் அலுவலர் அலுவலகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவர்கள் மீது - கல்முனை பொலிஸ் நிலையத்திலிருந்து 400 மீற்றர் தொலைவில், தேசிய சேமிப்பு வங்கிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட கப்பல் கப்டன் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவராம்!

கொழும்பு —

சோமாலியாவில் உலக உணவுத்திட்டத்தின் நிவாரணப் பொருட்களுடன் சென்றபோது கடத்தப்பட்ட கப்பலின் கப்டனான செல்லத்துரை மகாலிங்கம் நலமுடன் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் -

கடந்தப்பட்ட கப்பலின் கப்டனான செல்லத்துரை மகாலிங்கத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தொடர்புகொண்டபோதே - அவர் நலமுன் இருப்பதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலா பலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P- 0779122836**
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)

## இன்று கொடியேற்றம்

நவிண்டில்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 16 தினங்கள் உற்சவம் இடம் பெறும். (116)

**நாகதன்னி** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)



சத்தியராஜ், சுனிதாவர்மா வடிவேல் நடித்த
**6.'2"**

வெகு விரைவில்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த
**சின்னா!**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

**சந்திரமுகி**



பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

சுனாமி போன்ற இயற்கை அழிவுகளை சித்தரிக்கும் திரைக்காட்சி

**DAY AFTER TOMORROW**
**(நாளை மறுநாள்)**

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரமாக
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி,சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்



**அந்நியன்**
**anniyan**
இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரமேஷ், பூஜா, சரத்குமார் நடித்த

**ஜித்தன்**



பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

## விற்பனைக்கு

- தரம் 1 முதல் 11 வரையான புத்தகங்கள், பயிற்சிகள்.
- க.பொ.த.உயர்தர பிரபல ஆசிரியர்களின் உயிரியல், இரசாயனவியல், விலங்கியல், புத்தகங்கள் கடந்தகால வினாவிடைத் தொகுப்புக்கள்.
- கணினி மற்றும் ஆங்கில பயிற்சிப் புத்தகங்கள்.
- எழுதுகருவிகள், பெயின்ரிங்ஸ்ரிக், வாட்டக்கலர்.
- வாணீஸ், மணிலா, பிறவுண், ரிசு பேப்பர் வகைகள்.
- பிறந்தநாள் வாழ்த்துமடல்கள் என்பன விசேட கழிவு விலையில் விற்றுத் தீர்த்தல்.
- கண்ணாடி அலுமாரி (9' x7'x 10" 10 தட்டு )
- மேசைகள், கதிரைகள் என்பனவும்.

சிற்றி தொலைத் தொடர்பு நிலையம்
II சேர் பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

(C/4268)

## Dialog டயலொக்

kit என்னேரமும் உன்னுடன்...

100/= 400/= 1000/= விலைகளில் கைபடக்கத் தொலைபேசி அட்டைகளையும், சகல விதமான தொலைபேசி அட்டைகளையும், SIM இணைப்புகளையும் (Connection) மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**Sri Murugan**
Tele Communication & Agenc Post Office,
303, K.K.S. Road Jaffna.
T.P: 021 222 5392, Fax : 222 3214

(C/4269)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஞானசுந்தரம் கஜீபன்

அவர்கள் நேற்று (06-07-2005) அகாலச் சாவடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைவதோடு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு.பாஸ்கரன் (பிரபா),
பாண்டியன் குளம்.

(சி-3682)

## முதலாம் ஆண்டின் நீங்கா நினைவில்

மலர்வு 08 - 08 - 1924



உதிர்வு 18 - 06 - 2004

### அமரர் முருகேசு சின்னம்மா

ஆண்டொன்று மறைந்தாலும் –
அம்மா ... நீங்கள்... எம்மனதில்...
இன்றும் மறையவில்லை...
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்...
அகலாது உங்கள் நினைவுகள் என்றுமே.

என்றென்றும் உங்கள் நினைவுடன் :
மகள், பெறாமகள்,
குடும்பத்தினர்.

கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(1975)

## மரண அறிவித்தல்

### திருமதி லோகேஸ்வரன் (ராம்கி) சுசீலா (பொம்மி)

(த. பொ. மே.நிறுவனம்,செய்தி வெளியீட்டுப் பிரிவு, நடுவப் பணியகம்)

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை (பாமஸ்கூல், திருநெல்வேலி அருகாமை) பிறப்பிடமாகவும், கட்சன் வீதி, வட்டக்கச்சி 94ஆம் இலக்க வீட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரன் (ராம்கி) சுசீலா (பொம்மி) தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகம், செய்தி வெளியீட்டுப் பிரிவு, வட்டக்கச்சி 06-07-2005 புதன்கிழமை அதிகாலை அகால மரணமடைந்தார்.

அன்னார் லோகேஸ்வரனின் (ராம்கி) (தமிழீழ நிர்வாக சேவை, கிளிநொச்சி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற பத்மலிங்கம்-சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மகளும், கிஸ்ணசாமி - சுப்புலட்சுமி ஆகியோரின் மருமகளும், பத்மகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற பமிலா (லதா), பிறேமிலா (லைலா), நிர்மலா (நிம்மி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சண்முகானந்தன் (விநாயகர் ஸ்ரோர்ஸ், கல்கமுவ), சி.முருகதாஸ் (ரவிராஜ் - போராளி - தமிழீழ பொருண்மிய நிறுவன S.M.S. எஞ்சினியர்) நடேசகுமார் (இந்திரன்) - மோட்டார் சைக்கிள் திருத்துனர், முள்ளியவளை, மக்கி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், கிருஸ்ரிக்கா, கிரிசாந்தன், தலக்சன், சுலக்சனா, கர்ணன், கீர்த்தனன், கீர்த்திகா ஆகியோரின் சிறிய தாயாரும், வரோடிக்கா, ரெலிசித்தா, சாமுவேல், தமேக்கா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-07-2005 வியாழக்கிழமை பிற்பகல் 1மணியவில் அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக மம்மில் எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், போராளிகள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.146,
கட்சன் வீதி,
வட்டக்கச்சி,

தகவல்;
லோகேஸ்வரன் (ராம்கி)
கணவர்

(சி-3682)

## நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

### முன்னோடிக் கருத்தரங்கு

**விபரம் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்**

**யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்**

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்





DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

BOC
ரண் கெகுழ
சிறுவர் சேமிப்புக் கணக்கை மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

யாழ்.மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி உடனடியாக "சந்தைப்படுத்தல் பிரிவு, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை**

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



### குமரகுரு

புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி "நமது ஈழநாடு, கிளைக்காரியாலயம், 152, யாழ்.சாலை கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..................................................
தற்போதைய முகவரி:- ..................................................
பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ..................................................
மாவட்டம் :- ..................................................

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| இலக்கம் | |
| மாவட்டம் | |

..................................................
பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம்

..................................................
மாணவர் கையொப்பம்

# நிவாரணசபை மூலம் வடக்கு -கிழக்கை விடுதலைப் புலிகளுக்கு வழங்கவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு



சுனாமி நிவாரணசபை மூலம் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படவில்லையெனவும், இந்தச்சபை சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதற்கே மேற்கொள்ளப்பட்டதெனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பட்டதாரிகளின் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள், ஆகியோரை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுனாமி நிவாரண சபைக்கான வெளிநாட்டு உதவிகள் திறைசேரிக்குச் செல்கின்றன. இந்த சுனாமி அனர்த்தம் எமக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது.

வடக்கு- கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் பலத்த பாதிப்புகள் ஏற்பட்டதை நாம் மறந்துவிடலாகாது. அவர்களுக்கு ஏற்பட்ட அதேயளவு சேதம் எமக்கும் ஏற்பட்டது. இதற்காக நாம் ஏற்படுத்திய சுனாமி நிவாரண சபை மூலம், நாம் அவர்களுக்கு எதையும் தாரை வார்க்க மாட்டோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்பவே இந்தச் சபை ஏற்படுத்தப்பட்டது. சகல முடிவுகளையும் இந்தச் சபையே எடுக்கும்.

பாடசாலைகள், வைத்தியசாலைகளை நிர்வகிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்பதுபோல, சுனாமி நிவாரணசபை அந்தப் பிரதேசங்களிலுள்ள காணிகளைப் பெற்று, வேறு கட்டடங்கள் அமைப்பதற்கு திட்டங்கள் தீட்ட முடியாது.

உயர்சபையான தேசியசபையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி, அரசாங்க பிரதிநிதி, மற்றும் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரென மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

கிழக்கில் சிங்களவர்களும், முஸ்லிம்களும் கூடுதலாகவும், வடக்கில் தமிழ் பிரதிநிதிகள் கூடுதலாகவும் அங்கம் வகிக்கின்றனர். மற்றைய குழுவில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு கூடுதலாக இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இது ஒரு சமூக அரசியல் புரட்சியாகும்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உங்கள் அனைவரையும்விட, விடுதலைப்புலிகளுடன் போராடியவள் நான். இந்தப் பொதுக்கட்டமைப்பின் மூலம் காணி உரிமம் எதுவும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# தமிழ் பெண்கள் மீது காடையர் பாலியல் முயற்சி

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டம் கச்சக்கொடி சுவாமிமலைக் கிராமத்தில் பெண்களை சிங்களக் காடையர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம் பெற்றது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் மீள்குடியேற்றம் வீடமைப்பு தொடர்பாக நடைபெற்ற கிராமசேவகருடனான கலந்துரையாடலுக்காகச் சென்றிருந்த சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தி காடையர்கள் பெண்களுடன் பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டனர்.

அங்கு சிறுபிள்ளைகளுடன் இருந்த இளம் தாய்மாரை அங்கு வந்தவர்கள் கத்திகளைக் காட்டி அச்சுறுத்தியபோது, பெண்கள் அலறி அடித்துக்கொண்டு ஓடினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரிடம் மக்கள் முறையிட்டும் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# 27 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் சுதந்திர சதுக்கத்தில் நாளை அழிப்பு

கொழும்பு

சட்டரீதியற்ற வகையில் பயன்பாட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றியவையும் மற்றும் தப்பியோடிய படையினரால் கையளிக்கப்பட்டதுமான, சுமார் 27 ஆயிரம் ஆயுதங்கள்- சர்வதேச சட்டரீதியற்ற ஆயுதங்கள் தினமான நாளை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைத்து அழிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த வகையிலான சட்ட ரீதியற்ற ஆயுதங்கள், பெருமளவில் அழிக்கப்படுவது கடந்த 14 வருடங்களில் இதுவே முதன்முறையென பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்த அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவிக்கையில் -

இந்த சட்டவிரோத ஆயுதங்கள் பொலிஸாரின் விசாரணைகள் மற்றும் விசேட நடவடிக்கைகள் மற்றும் தப்பியோடிய படையினர் மாவட்ட செயலகங்களில் கையளித்தமை போன்றவற்றின் மூலம் பெறப்பட்டவையாகும்.

இந்த வகை ஆயுதங்கள் எதிர்காலத்தில் எவரிடமும் தேவையற்ற விதத்தில் சென்றுவிடக்கூடாதென்பதற்காகவே அழிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01, தே)

### புனர்வாழ்வு அமைச்சு செயலரை

# கணக்காய்வுச்சபை முன் ஆஜராகும்படி கோரிக்கை

கொழும்பு

சுனாமி பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் அரசாங்கத்தின் சார்பில் கையொப்பமிட்ட புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்கவை நாடாளுமன்ற கணக்காய்வு சபையின் முன்னால் ஆஜராக வேண்டுமென்று, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.


அரசியல் அமைப்பின் பல சரத்துக்களை மீறியுள்ள இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையானது, நாடாளுமன்றத்தின் நிதிக்கட்டமைப்பையும் மீறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டினர்.

எனவே, இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட எம்.எஸ்.ஜயசிங்க - நாடாளுமன்ற கணக்காய்வு சபையின் முன் ஆஜராக வேண்டுமென்று அவர் கோரினார்.

இதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்புக்கள் காட்டப்படாத நிலையில் நாளை ஜயசிங்க நாடாளுமன்றத்தின் கணக்காய்வு சபையின் முன்னால் ஆஜராக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (01)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக முஸ்லிம்களும் வழக்குத் தாக்கல்

கொழும்பு



பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் மூலம், கிழக்கில் முஸ்லிம்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாகத் தெரிவித்து உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்ய தேசிய ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்சியின் தலைவி அமைச்சர் பேரியல் அஸ்ரப்பின் தலைமையில்த அக்கரைப்பற்றில் கடந்த சனிக்கிழமை நடந்த கட்சியின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பிரதி அமைச்சருமான சேகு இஸ்ஸதீன் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து அமைத்த முஸ்லிம் சமாதான செயலகத்தின் மூலம்த இந்த மனுவை தாக்கல் செய்யும் பிரேரணை இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் சமாதான செயலகம் இந்த விடயத்தில் தலையிடாமல் இருந்தால்த தேசிய ஐக்கிய முன்னணி மூலமே இந்த மனு தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பொம்மலாட்டத் தலைவர்கள் தோன்ற எவ்வகையிலும் இடமளிக்க மாட்டோம்

## விமல் வீரவன்ச கூறுகிறார்

கொழும்பு

இலங்கையில் வெள்ளைப் புலிகளின் சொற்படி நடனமாடக்கூடிய பொம்மலாட்டத் தலைவர்கள் தோற்றம் பெறுவதற்கு, எவ்வகையிலும் இடமளிக்கப்பட மாட்டாதென, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர்களில் ஒருவரான ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

சந்திரிகாவின் சிறு குழுவினரால் விடுதலைப் புலிகளுக்கு பொதுக்கட்டமைப்பை வழங்கிய பின்னர், எமது இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும், பொலிஸ் புனனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர்.


ரணில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - யுத்தம் புரியும் தனிப் பலத்தை விடுதலைப் புலிகளுக்கு வழங்கினார். அன்றிலிருந்து இன்றுவரை அவர்கள் தனியாகவே யுத்தம் செய்து வருகின்றனர்.

சிங்கள இனத்தவர்களான எமது படைச்சிப்பாய்களைக் கடத்திச் சென்றார்கள். அவற்றைக் கண்டிக்கக்கூட இந்த நாட்டில் அரசாங்கம் இல்லை. இந்தத் துரோக சக்திகள் இரண்டும் இந்த நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டன.

இந்தக் காட்டிக்கொடுப்பு ஒப்பந்தங்களின் பின்னால் நோர்வே சமாதானப் பிரதிநிதிகள் உள்ளனர்.

இந்த நாட்டிலுள்ள பொம்மைத் தலைவர்களுக்கும், நோர்வே வெள்ளைப் புலிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு படையினர் இருக்கவில்லை. இதுவரை எமது படையினருக்கு மரணப்படுக்கை உரிமையாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகளுக்கு பொதுக்கட்டமைப்பும் வழங்கி முடிந்துவிட்டது. ஆனால் எதிர்வரும் காலங்களில் வெள்ளைப் புலிகளால் ஆட்டுவிக்கப்படக்கூடிய தலைவர்கள் உருவாக்கப்படமாட்டார்கள் என நான் உறுதியளிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)



# மாவட்ட நிர்வாக சபைகளூடாகவே நிதியுதவிகள் வழங்கப்படுமாம்!

## நாடாளுமன்றில் நிதியமைச்சர்



கொழும்பு

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்புக்கு அமைய, வடக்கு - கிழக்கில் பிரதேச புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படும் என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாக சபையில் அரச ஊழியர்களே இடம் பெற்றுள்ளனர். மாவட்ட குழுக்களுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியம் தொடர்பான கணக்காய்வுகள் யாவும், கணக்காளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படுமென்றும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே நிதியமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்தார். (01)

# முத்தலிப் படுகொலை சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு


இராணுவ புலனாய்வுத்துறையின் சிரேஷ்ட அதிகாரியான லெப்.கேணல் நிசாம் முத்தலிப்பின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்படும் நால்வரை தாம் கைதுசெய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீடொன்றில் இருந்தே 3 பெண்களும் 1 ஆணும் கைதுசெய்யப்பட்டனர்.

பண்டாரகம பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும், எனினும் இவர்களது பெயர்கள் உடன் தெரிவிக்க முடியாதெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (01)

# அனுபவமில்லாத மேற்கிந்திய அணியுடன் மோதுவது துரதிஷ்டவசமானதாகும்!

## அத்தபத்து கூறுகிறார்



கொழும்பு—

மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் முதல் டெஸ்ட் எதிர்வரும் 13ஆம் திகதி கொழும்பில் தொடங்கவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில் விளம்பர ஒப்பந்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையால், இலங்கைத் தொடரில் முன்னணி வீரர்கள் யாரும் பங்கேற்கவில்லை. இதனால் சந்தர்போல் தலைமையிலான அனுபவம் இல்லாத புதிய அணி இலங்கையுடன் மோதுகிறது.

இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் கப்டன் அத்தபத்து அனுபவம் இல்லாத மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் மோதுவது துரதிஷ்டவசமானதென கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

இலங்கை அணி - லாரா, சர்வான், கைல் போன்ற முன்னணி வீரர்கள் இல்லாத மேற்கிந்தியத் தீவுகளுடன் மோதுகிறது. இது சிறந்த போட்டியாக இருக்காது. அனுபவம் இல்லாத வீரர்களுடன் மோதுவது என்பது எங்களைப் பொறுத்தவரை துரதிஷ்டவசமானதாகும். என்னைப் பொறுத்தவரையில் இதுவரை நான் மிகச் சிறந்த அணிகளுடனேயே ஆடியுள்ளேன்.

கடந்த முறை மேற்கிந்தியத் தீவுகள் இங்கு விளையாடிய போது லாரா 600 ஓட்டங்களைக் குவித்தார். இப்போது அவர் இல்லை. இதுபோன்று தான் சிம்பாப்வே அணியில் முன்னணி வீரர்கள் இல்லாத அணியுடன் மோதினோம். அப்படி விறுவிறுப்பு இல்லை. நாங்கள் தரமான அணியுடன் மோத விரும்புகிறோம்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி எங்கள் நாட்டிற்கு 150ஆவது போட்டியாகும். இதில் சிறப்பாக ஆடி தொடரைக் கைப்பற்றுவோம். மேலும் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் ஓராண்டுக்கு பின்பு அணிக்குத் திரும்பியுள்ளார். இது அணிக்கு கூடுதல் பலத்தைச் சேர்த்துள்ளது. அவர் எங்கள் அணியின் சிறந்த பந்து வீச்சாளர் மட்டுமல்ல, உலகின் தலை சிறந்த பந்துவீச்சாளர் ஆவாரெனத் தெரிவித்தார்.

# முக்கோணத் தொடரிலிருந்து முரளிதரன் விலகிக்கொண்டார்!



கொழும்பு

இலங்கை கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. அதனைத் தொடர்ந்து அந்த அணி 3 நாடுகள் போட்டியிலும் ஆடவுள்ளது.

இந்தத் தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திர வீரர் லாறா உட்பட முன்னணி வீரர்கள் பலர் ஏற்கனவே விலகிவிட்டனர். தற்போது இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் இந்தத் தொடரிலிருந்து விலகியுள்ளார். விலகுவதற்கான காரணத்தை அவர் கூற மறுத்து விட்டார்.

காயம் காரணமாக முரளிதரன் கடந்த சில மாதங்களாக சர்வதேச போட்டிகளில் விளையாடாமல் இருந்து வருகிறார். ஒரு சில கவுண்டி போட்டிகளில் மட்டுமே அவர் ஆடிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டப் போட்டி!

யாழ்ப்பாணம்

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் விலகல் முறையில் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் -

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.சேவியர் பி அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கலஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# அவுஸ்ரேலிய — இங்கிலாந்து இன்று முதல் ஒருநாள் போட்டி!

ஹெட்டிங்லே

அவுஸ்ரேலியா, இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளிடையேயான 3 நாடுகள் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்றது. இதில் அவுஸ்ரேலியா - இங்கிலாந்து மோதிய இறுதியாட்டம் சமனிலையில் முடிந்தது.

3 நாடுகள் போட்டியைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா - இங்கிலாந்து இடையே 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இவ்விரு அணிகளிடையேயான முதலாவது ஆட்டம் இன்று ஹெட்டிங்லேயில் நடைபெறவுள்ளது.

2ஆவது ஆட்டம் 10ஆம் திகதி லோட்ஸ் மைதானத்திலும், 3ஆவது மற்றும் கடைசி ஆட்டம் ஓவல் மைதானத்திலும் நடக்கிறது.

இதேவேளை இன்றைய இந்தப் போட்டியில் ஐ.சி.சியின் புதிய முறை அமுல்படுத்தப்படுகிறது.

இதன்படி மாற்று வீரராக களமிறங்கும் வீரர் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு பணியில் ஈடுபடலாம். மேலும் இன்னர் செட் எனப்படும் முதல் 15 ஓவர்களைக் கொண்ட களத்தடுப்பு முறையிலும் ஐ.சி.சி. மாற்றம் கொண்டுவந்தது. இது 20 ஓவர்களாக மாற்றப்பட்டு முதல் பாதியில் 10 ஓவர்களாகவும் மீதமுள்ள 10 ஓவரை இரண்டாகப் பிரித்து கப்டனின் விருப்பப்படி ஆட்டத்தின் எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த விதிமுறையும் இன்று நடைபெறும் போட்டியில் முதன் முதலாகக் கொண்டுவரப்படுகிறது.

ஐ.சி.சியின் புதிய விதிமுறைகள் இன்றைய போட்டியில் பயன்படுத்தப்படுவதால் இரு அணிகளின் கப்டன்களுக்கும் களத்தடுப்பு முறையை மாற்றி அமைப்பதில் சிரமம் ஏற்படலாம். முதல் முறையாக இந்த முறை கடைப்பிடிக்கப்படுவதால் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்பது இன்று தெரியவரும்.

## கே.சி.சி.சி கிண்ண கிரிக்கெட்

# பல்கலைக்கழக, ஜொலிஸ்ரார் அணிகள் முதல் சுற்று ஆட்டங்களில் வென்றன!

யாழ்ப்பாணம்

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இருவேறு ஆட்டங்களில் யாழ். பல்கலைக்கழக அணியும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்று தலா 4 புள்ளிகளை பெற்றுக்கொண்டன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியும், ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 156 ஓட்டங்களைப் பெற்றது. காந்தன் 56 ஓட்டங்கள், றஜனி 28 ஓட்டங்களை எடுத்தனர். ஜெயந்தன் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. மணி 24, சர்வா 54, தனுஸ்காந்தன் 36, கௌரி 19 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அன்று மாலை நடைபெற்ற இன்னொரு போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 93 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் வி.கே.சண்முகலிங்கம் 14 ஓட்டங்களையும், டினேஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 94 ஓட்டங்களை பெற்றது. இதில் யது 24, கோபி 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனால் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

## சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# கலட்டி ஐக்கிய, சென்.றொக்ஸ் அணிகள் நேற்றைய போட்டிகளில் வெற்றிபெற்றன!

யாழ்ப்பாணம்

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற இருவேறு ஆட்டங்களில் குருநகர் சென்.றொக்ஸ் மற்றும் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றன.

நேற்று மாலை 3.30 மணியளவில் இளவாலை யங்ஹென்றீஸ் பி அணிக்கும் குருநகர் சென்.றொக்ஸ் அணிக்குமிடையே முதலாவது ஆட்டம் இடம்பெற்றது. இதில் ஆட்டம் ஆரம்பித்து இரண்டு அணிகளுமே கோல் போட முயற்சித்தும் இரு அணி வீரர்களின் பலமான தடுப்பாட்டத்தால் அது நிறைவேறவில்லை. எனினும், ஆட்டத்தின் 34ஆவது நிமித்தில் யங்ஹென்றீஸ் வீரர் கஜிதன் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டார். இதன் பின்னர் ஆட்டத்தில் வேகம் அதிகரித்தது. இந்த நிலையில் சென்.றொக்ஸ் அணி வீரர் றொகான் 45ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டதனால் இரு அணிகளும் சமநிலையை அடைந்தன.

இதனையடுத்து இரு அணி வீரர்களும் கோல் போடமுயன்றும் முடியாத காரணத்தால் ஆட்டநேர முடிவில் 1:1 என இரு அணிகளும் பெற்றதனால் தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்.றொக்ஸ் அணி 5:4 என இளவாலை யங்ஹென்றீஸை வெற்றி கொண்டது.

இதன் பின்னர் 4.30 மணியளவில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும் கல்வளை விநாயகர் அணிக்குமிடையேயான ஆட்டம் இடம் பெற்றது. இதில் ஆட்டம் ஆரம்பித்த முதலாவது நிமிடத்திலேயே ஐக்கிய விளையாட்டுக் கழக வீரனான யதீஸ் கோலைப் போட்டு விநாயகர் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். இதன் பின்னர் 7ஆவது நிமிடத்தில் அதே அணி வீரனான முரளி ஒரு கோலைப் போட்டார். இதனையடுத்து விநாயகர் அணி வீரர் அரவிந்தன் ஒரு கோலைப் போட 15ஆவது நிமிடத்தில் ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர் முரளி மீண்டும் ஒரு கோலைப் போட்டார். இவ்வாறு ஆட்டம் மாறிமாறி சூடு பறந்தது.

இந்த நிலையில் 31ஆவது நிமிடத்தில் விநாயகர் அணி வீரன் டொமினியன் ஒரு கோலைப் போட்டார். மறுபக்கத்தில் ஐக்கிய விளையாட்டுக்கழக வீரன் சசிகரன் 35ஆவது நிமிடத்திலும் அதே அணி வீரன் சுவேந்திரன் 46ஆவது நிமிடத்திலும் கோலைப்போட விநாயகர் அணிவீரன் டொமினிக் 48ஆவது நிமிடத்தில் கோலைப் போட்டார். இறுதியில் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 5;3 என்ற கோல்கணக்கில் விநாயகர் அணியை வெற்றிகொண்டது.

# விளையாட்டு

# கங்கூலிக்கு விதிக்கப்பட்ட தடை; தென்னாபிரிக்க நீதிபதி விசாரணை!



லண்டன்

கங்கூலிக்கு விதிக்கப்பட்ட தடை பற்றி விசாரிக்க தென்னாபிரிக்க நீதிபதி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் அணி இந்தியாவில் விளையாடியபோது, ஒரு ஆட்டத்தில் இந்திய அணி தாமதமாகப் பந்து வீசியது. இதற்கான தண்டனை கப்டன் கங்கூலிக்கு வழங்கப்பட்டது. இப்போது அவர் 6 போட்டிகள் தடைக்கு உள்ளாகியுள்ளார்.

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்யவேண்டுமென்று கங்கூலி ஐ.சி.சிக்கு முறையீடு செய்தார். அதுபோல அவரது தண்டனையை ரத்துச் செய்யவேண்டுமென்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திராவும் ஐ.சி.சிக்கு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதம் கிடைத்தவுடன் ஐ.சி.சி நடவடிக்கையில் இறங்கியது. கங்கூலி விவகாரம் குறித்து விசாரிக்க தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நீதிபதி அல்பெ சாச்சஸ் என்பவரை ஐ.சி.சி நியமனம் செய்துள்ளது. இது ஒரு நபர் விசாரணைக் கமிஷனாகும்.

கங்கூலிக்கு விதிக்கப்பட்ட தண்டனை சரிதானா என்று பல்வேறு தொழில்நுட்ப விடயங்களைக் கவனத்தில் கொண்டு நீதிபதி அல்பெ பரிசீலனை நடத்துவார். அதுபோல என்ன காரணத்துக்காக கங்கூலிக்கு 6 போட்டி தடை விதிக்கப்பட்டது என்ற சூழ்நிலை காரணங்களையும் நீதிபதி கவனத்தில் எடுத்துக்கொள்வார் என்று ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கங்கூலி சார்பாக முறையீடு செய்யப்பட்டது. இந்திய கிரிக்கெட் சபை சார்பாக பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கு ஐ.சி.சி சார்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் இனிமேல் நீதிபதி அல்பே அளிக்கும் தீர்ப்புத்தான் இறுதித் தீர்ப்பாக இருக்கும். அவர் விரைவில் தனது தீர்ப்பை வழங்குவார் என்றும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

# சிறுவர்கள் மீது பாதிப்பை ஏற்படுத்துவதற்கு பெற்றோருக்குக் கூட உரிமை இல்லை!

## பேராசிரியர் தயா. சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் —

ஆசிரியர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கும் தகவல்களின் படி- இன்று எமது சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தை, அவர்கள் மீதான வன்முறையை ஏற்றுக்கொள்கின்ற ஒரு மனநிலை உருவாகிவருவதை உணரக்கூடியதாக இருக்கிறது என பேராசிரியர் தயா. சோமசுந்தரம் தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற உளவளத்துணையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

சில பெற்றோர் இது எனது பிள்ளை நான் எதுவும் செய்வேன் என்ற வகையில் செயற்படுகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ளமுடிகிறது. உண்மையில் சிறுவர்கள் மீது பாதிப்பை ஏற்படுத்துவதற்கு, அவர்களது உரிமைகளை மறுப்பதற்கு பெற்றோருக்குக்கூட உரிமையில்லை.

உளவளத் துணையாளர்களை விரைவாக உருவாக்கிவிட முடியாது. ஏனெனில் அது ஒரு செயல்முறை அனுபவத்தோடு இணைந்தது. அதற்கு நீண்டகால அனுபவம் தேவை.

இவ்வாறான ஒரு நீண்டகால அனுபவத்திற்கூடாகவே முழுமையாக தேர்ச்சிபெற்ற ஒரு உளவளத்துணையாளரை உருவாக்கிவிட முடியும். இது ஒரு புனிதமான துறை. நெருக்கீட்டுக்கு உள்ளாகிவிட்ட, உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கு உதவவேண்டிய ஒரு துறை. மாணவர்களது பின்னணி, அவர்களது தேவை என்பவற்றை அறிந்து, அதற்கேற்ப அவர்களுக்கு உதவ வேண்டிய பொறுப்பு உளவளத் துணை ஆசிரியர்களாகிய உங்களுக்கு உரியது.

இன்று எமது சமூகத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தை, அவர்கள் மீதான வன்முறையை ஏற்றுக்கொள்வதான ஒரு மனநிலை உருவாகிவருகிறது. இவ்வாறான மனநிலையை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு உளவளத் துணை ஆசிரியர்கள் பாடுபட வேண்டும் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அந்த நிகழ்வில் தலைமை தாங்கிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன் உரை நிகழ்த்துகையில் -

நீண்டகாலமாக எமது மண்ணில் நடந்துவரும் பல்வேறு பிரச்சினைகளுடன், சுனாமி அனர்த்தமும் சேர்ந்ததன் காரணமாக பெருமளவிலான எமது மக்களும், மாணவர்களும் தமது இருப்பிடங்களை இழந்து, துன்ப துயரங்களுடன் இருக்கின்றனர்.

இந்த நிலையில் பல நிறுவனங்கள் இங்கு வந்து மக்களதும், மாணவர்களதும் உளச்சீராக்கல் நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் ஜி.ரி. இசற் நிறுவனமும், மாகாண கல்வி அமைச்சு, யாழ். பல்கலைக்கழகம், சாந்திகம் என்பன இணைந்து ஒரு வருடத்துக்கும் மேலாக ஆசிரியர்களுக்கான உளவளத் துணை பயிற்சியை வழங்கி வருகின்றன.

இவர்களது இந்தச் செயற்பாடு காரணமாக - 1200 வரையிலான நட்புதவியாளர்களும், 150 வரையிலான உளவளத் துணையாளர்களும் எமது குழந்தைகளின் உளத்தேவைகளை ஓரளவு நிறைவுசெய்யக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது, முதலில் பயிற்சி பெற்ற உளவளத்துணை ஆசிரியர்கள் மிகப் பெறுமதி மிக்க அர்ப்பணிப்பான சேவைகளைப் புரிந்துள்ளனர்.

ஆரம்பத்தில் எமது பிரதேசத்திலேயே அதிகமான உளச்சிக்கலுக்குள்ளாகிய பிள்ளைகள் இருந்தனர். ஆயினும் சுனாமியின் பின்னர், இலங்கை முழுவதும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூற வேண்டும்.

இதனால்தான் இன்று தென் பகுதிகளிலும் இந்த உளவளத் துணை விடயங்களில் அதிக அக்கறை காட்டப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார். (31)

## ஊர்காவற்துறையில் பொது மண்டபம்

சுதுமலை —

ஊர்காவற்துறை கரம்பொன் காளிகோவிலடிப் பகுதியில் பிரமாண்டமான பொது மண்டபம் ஒன்று போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பொது மண்டபத்தால் அந்தப் பகுதி மக்கள் பலரும் நன்மையடையக்கூடியதாக இருப்பதுடன், பொது நிகழ்வுகளை இலகுவாகவும், சிறப்பாகவும் நடத்தமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

## பரீட்சை நடத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம் —

மாணவர் அடைவுமட்டத்தை அளவிடுவதற்கு தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி பரீட்சை நடத்துவதற்குத் தயாராகுமாறும், பரீட்சையை அதிபரே பொறுப்பேற்று நடத்துவதுடன், விடைத்தாள்களை பரீட்சை முடிந்தவுடன் யாழ். வலய கல்விப்பணிமனையில் ஒப்படைக்குமாறும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்தார்.

# இரு விடுதலைப் புலி போராளிகள் மல்லாகம் நீதிமன்றால் விடுதலை!

யாழ்ப்பாணம் —

முகமாலை இராணுவச் சோதனைச்சாவடி ஊடாக இருவரைக் கடத்திச் சென்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர் இருவருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில், அவர்கள் மீது சுமத்திய குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய ஆதாரம் இல்லாததால், இந்த இரு போராளிகளையும் மல்லாகம் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுதலை செய்தது.


மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த சூரியகுமார் சாந்திகுமார் என்ற வாலிபரையும், ஆறுமுகம் திருபாகரன் என்ற குடும்பஸ்தரையும் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை இராணுவச் சோதனை சாவடி ஊடாக, கிளிநொச்சிக்கு கடத்திச் செல்ல முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவர் 19.08.2003 அன்று முகமாலை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு, கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் பின்னர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, இருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் முறைப்பாட்டுக்காரர்கள் இருவரையும் குறுக்கு விசாரணை செய்தபோது, அவர்கள் இருவரும் தம்மை எவரும் கடத்தவில்லை என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் எங்கும் தடுத்து வைக்கப்படவில்லை என்றும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணையின் முடிவில், மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினிதேவி இளங்கோவன் இரண்டு எதிரிகள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நிரூபிப்பதற்கு எதுவித ஆதாரங்களும் இல்லாதபடியால், வழக்கைத் தள்ளுபடி செய்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் இருவரையும் விடுதலை செய்தார்.

# வண. பிதா ஜெயநேசனுக்கு கனடாவில் கலாநிதி பட்டம்!



யாழ்ப்பாணம் —

தென்னிந்திய திருச்சபையின் மூத்த குருவானவரும், இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் திருச்சபையின் வேலைகளுக்கு பொறுப்பாகத் திகழ்ந்து, அரும்பணிகளை ஆற்றிவருபவருமான வண. எஸ். ஜெயநேசன் கனடாவில் உள்ள ரொரன்டோ பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியான கனடா கிறிஸ்தவ கல்லூரி பட்டப்படிப்பு நிறுவனத்தின் ஊடாக கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

இவர் ஏற்கனவே B.th, B.D, Stm ஆகிய பட்டங்களைப் பெற்றவராவார். இவருக்குத் தற்போது கலாநிதிப் பட்டம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சுகவாழ்வு நிலையமும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனமும் இணைந்து நடத்தும் வன்முறையற்ற தொடர்பாடல், மத்தியஸ்தம் என்பவற்றினூடாக - முரண்பாடுகளைத் தீர்த்தலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான 3 நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று- இன்று யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் இந்தப் பயிற்சிப் பட்டறை நாளையும், நாளை மறுதினமும் இதே நேர ஒழுங்கில் நடைபெறும் எனவும், பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு உணவு, சிற்றுண்டிகள் வழங்கப்படும் எனவும், தெரிவுசெய்யப்பட்டுள்ள தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை சமூகத்தினரிடையே முரண்பாட்டு முகாமைத்துவம் சார்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தப் பயிற்சிப் பட்டறையின் நோக்கம் என - இந்தப் பயிற்சிப் பட்டறையின் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர். (31)

# 167 நிலையங்களில் மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் 167 நிலையங்களில் 2-10 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கான ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடப்படவுள்ளதாக, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2-10 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கான இந்த முதலாவது கட்ட தடுப்பூசி எதிர்வரும் 9 ஆம் திகதியும், இரண்டாவது கட்டமாக 23 ஆம் திகதியும் வழங்கப்படும்.

இந்தத் தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது தொடர்பான மேலதிக விபரங்களை அண்மையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## வருடாந்த உற்சவம்

அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

உற்சவகாலத்தில் காலை 9 மணிக்கு கண்ணகையம்மன் கோவிலடித் துறைமுகத்திலிருந்து அனலைதீவுக்கும், பிற்பகல் 2 மணிக்கு அனலைதீவிலிருந்து கண்ணகையம்மன் கோவிலடித்துறைமுகத்துக்கும் விசேட படகுச்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

# எக்ஸ்றே பிரிவு இயங்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம் —

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் எக்ஸ்றே கதிரியக்க பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எக்ஸ்றே கதிரியக்க சேவைகளை பெறவேண்டிய நோயாளர்கள் இந்த வைத்தியசாலைகளுக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையில் பிரதி புதன்கிழமை தோறும் கண் சத்திரசிகிச்சை நிபுணர் குகதாசனின் கண் மருத்துவ சிகிச்சையும், மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜின் கிளினிக்கும் இடம்பெற்று வருவதாகவும், இந்த மருத்துவ சேவைகளில் நோயாளர்கள் தமது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.




# அடிக்கல் நாட்டும் நிகழ்வு

சுதுமலை —

ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்துக்கென அமைக்கப்படவுள்ள புதிய சமாசக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, அண்மையில் சங்கத் தலைவர் அ.கனகையா தலைமையில் இடம்பெற்றது.

சமாசத்துக்கான அடிக்கல்லை ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமேனனும், யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ச. அருணனும் நாட்டிவைத்தனர்.

இந்தக் கட்டடமானது ஊர்காவற்துறை பிரதேச செயலகம், சமுர்த்தி வங்கி, அரச ஊழியர் தங்கும் விடுதி மற்றும் பொது மண்டபம் என்பன அமைந்துள்ள இடத்துக்கு அண்மையாக இந்த சமாசக் கட்டடம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (44)




# பீற்றூட் செய்கை

பீற்றூட்டின் வீங்கிய வேர்ப் பகுதியே உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. உவர்த் தரைகளிலும் இந்தப் பயிர் சிறப்பாக வளரக்கூடியது. இதன் நாற்று மேடைப் பராமரிப்பும், தரை தயாரித்தலும் ஏனைய பயிர்களைப் போன்றதே.

ஒரு விவசாயி பெறும் விளைவின் அரைப் பகுதிக்கு மேல் சிறந்த நாற்று மேடைப் பராமரிப்பிலேயே தங்கியிருக்கிறது. தரை இலகுவில் நீர் பெறக்கூடியதாகவும், சிறந்த வடிகால் வசதி உடையதாகவும், திறந்தவெளியாகவும் இருப்பது நன்று. சிறந்த நீர் வடிப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளத் தரையைக் குறைந்தது 20 சென்ரி மீற்றர் ஆழத்துக்காவது பண்படுத்த வேண்டும்.

### நடுகை

மலைநாட்டுப் பகுதியில் பீற்றூட் நேரடியாக விதை மூலம் அல்லது நாற்று நடுகை மூலம், கலப்புப் பயிராகப் பயிரிடப்படுகிறது. மற்றைய பகுதிகளிலும் நாற்று நடுகை முறையே கைக்கொள்ளப்படுகிறது.

குளிர்ப் பிரதேசங்களில் 30x15 சென்ரி மீற்றர் இடைவெளி வழங்கலாம். ஆனால், உஷ்ணப் பிரதேசங்களில் 30x10 சென்ரி மீற்றர் இடைவெளி வழங்கினால் போதும்.

சிறு குமிழை அவதானித்தவுடன் நாற்றுக்களை மேடையிலிருந்து பிடுங்குதல் வேண்டும். நாற்றுக்கள் இந்தப் பருவத்தை அடைய, தாழ் நிலப் பகுதிகளில் 4 கிழமைகளும், மலைநாட்டுப் பகுதிகளில் 6 கிழமைகளும் செல்லும்.

நடுகையின் போது நாற்றுக்களின் காம்புகளை விட்டு இலைகளை அகற்றவும். இதேபோல் வேர் நுனியையும் கிள்ளி அகற்றவும். நிலையத்துக்கு ஒரு நாற்று வீதம் நாட்ட வேண்டும். விதைகள் நேரடியாக நாட்டப்படுமானால், நிலையத்துக்கு ஒரு நாற்று வீதம் நட்டு, மிகுதியை அகற்ற வேண்டும்.

தரை மிகவும் அமிலத்தன்மையாகக் காணப்படுமானால், ஒரு தொன் ஏக்கர் வீதம் டொலமைற் அல்லது சுண்ணாம்பு பிரயோகிப்பது விரும்பத்தக்கது. நுவரெலியாப் பகுதியில் மேலதிகமாக டொலமைற் அல்லது சுண்ணாம்பு பிரயோகிக்கப்படும்போதும், இலைகள் மிகவும் பச்சையாகக் காணப்படுவதோடும், உயர்விளைவு கிடைப்பதை விவசாயிகள் அவதானித்துள்ளார்கள்.

**பீற்றூட் உருமாறுவதைத் தவிர்க்க, களைகளைக் கட்டுப் படுத்த, வரிசைகளுக்கு இடையேயுள்ள தரையை இடையிடையே கிளற வேண்டும்.**

### பசளைப் பிரயோகம்

நடுகையின் போது சந்தையில் வசதிப்படும் உரக்கலவையில் ஏக்கருக்கு 250 கிலோ கிராம் வீதம் பிரயோகிக்கவும்.

நாட்டி 4-6 வாரங்களின் பின், சந்தையில் வசதிப்படும் உரக்கலவையில் ஏக்கருக்கு 150 கிலோ கிராம் வீதம் பிரயோகிக்கவும்.

### பராமரிப்பு

பீற்றூட் உருமாறுவதைத் தவிர்ப்பதற்கும், களைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், வரிசைகளுக்கு இடையேயுள்ள தரையை இடையிடையே கிளறி விட வேண்டும். தாவரத்தைச் சுற்றிச் சீனிக் கரைசலைப் பிரயோகிப்பதால் அல்லது தாவரத்தின் அடியிலிருந்து 8-10 சென்ரி மீற்றர் தூரத்தில் கறி உப்புப் பளிக்குகளை இடுவதால் விவசாயிகள் வெற்றிகரமான பீற்றூட் விளைச்சலைப் பெற்றுக் கொள்கின்றனர்.

### பூச்சிகளும் நோய்களும்

#### வெட்டுப் புழுக்கள்

★ இதைக் கட்டுப்படுத்த உரிய கிருமி நாசினியைப் பயன்படுத்த வேண்டும்.

★ இலைப்புழுக்கள் (விலாங்குப் புழுக்கள்)


இந்தப் புழுவின் தாக்கத்தால் பயிர் நுனி வளர்ச்சி குன்றி, வாட ஆரம்பிக்கும். அத்துடன் பீற்றூட்டின் தோல் கரடுமுரடாக மாறி வெடிக்கும். உரிய பூச்சிநாசினியைப் பயன்படுத்தி தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

### நோய்கள்

#### சேக்கஸ்போறா இலைப்புள்ளி

விசேடமாக ஈரக்கால நிலையின்போது இந்த நோய், பிரச்சினையாகக் காணப்படுகிறது. மழை காலம் ஆரம்பித்து 3-4 வாரங்களின் பின் இந்தப் புள்ளிகள் ஏற்படுவதால், உரிய கிருமி நாசினிகளை அறிவுறுத்தல்களின் பிரகாரம் விசிறவும்.

ஆரம்பத்தில் செவ்வூதா ஓரத்தைக் கொண்ட கபிலப் புள்ளிகள் இலைகளில் தோன்றும். பின் இலைப்புள்ளிகளின் நடுப்பகுதி சாம்பல் நிறமாக மாறி உதிர்ந்து விழுவதனால், இலைகளில் துவாரங்கள் ஏற்படும். நோய் தீவரமாகக் காணப்படும் போது, பல இலைகள் உதிர்வதால் பீற்றூட்டின் நுனிப் பகுதி நீட்சியடைந்து கரடு முரடாகக் காணப்படுகிறது.



### அறுவடை

நாற்று நட்டு 8-10 வாரங்களில் பயிர்கள் அறுவடைக்குத் தயாராகிவிடும். விதைகளை நேரடியாக விதைக்கும்போது, 10-12 வாரங்களில் அறுவடையை மேற்கொள்ளலாம்.

பீற்றூட்டை அதிக காலம் சேமித்து வைக்கலாம். ஆனால் தோட்டத்தில் அதிக காலம் விடும்போது பீற்றூட் கரகரப்பாக மாறும். ஏக்கரொன்றிலிருந்து 10-12 தொன் பீற்றூட் விளைவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# சிறுகைத் தொழில்

## இனிப்புகள், ரொபிகள் தயாரித்தல்



எல்லா வயதினராலும் விரும்பி உண்ணப்படும் தின்பண்டங்கள் இவை. எனவே, எல்லோராலும் இந்தத் தொழில் விரும்பி வரவேற்கப்படும் ஒன்றாகும். மிகச் சிறிதாக ஆரம்பித்து, மிக விரைவாகவும், பெரிதாகவும் வளர்ச்சியடையும் இயல்புடையது இந்தத் தொழில்.

மிகச் சிறிய முதலீட்டுடன் பெருமளவு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, தயக்கமின்றி இந்தத்தொழிலில் ஈடுபடலாம்

சிறிய பயிற்சி அனுபவத்துடன் தொழிலை ஆரம்பிக்கலாம். நாட்கள் போகப்போக தொழில் நுட்பங்களை மாற்றுவதன் மூலம், இவற்றின் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்தலாம்.

**தேவைப்படும் மூலப்பொருட்கள் -**

சீனி, திரவக் குளுக்கோஸ், எசென்ஸ், கலரிங் பவுடர்.

**உபகரணங்கள் –**

பாத்திரங்கள் (16-கேஜ்), மர அகப்பை, மரமேசை (மேற்பகுதி 3நூல் இரும்புத் தகடு கொண்டது), மரமேசை (மேற்பக்கம் கல்வனைட் தகடு கொண்டது) ரொபி, இனிப்பு வெட்டும் பொறி, தின்பண்ட வெப்பமானி, பொலித்தீன்சீலர், கத்தரிக்கோல், மரமேசை, ரொபி சுற்றும் கடதாசி. வீட்டின் ஒரு பகுதியிலேயே இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். முதலீடு அதிகரிக்கும் போது, ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்தோஅல்லது சொந்தக்காணி வேண்டியோ தொழிலை விரிவுபடுத்தலாம்

என்றும் வீழ்ச்சியுறாத பரந்த சந்தை வாய்ப்பு இதற்கு உண்டு. வரட்சிக் காலங்களில் இனிப்பு, ரொபிகளுக்கான மதிப்பு அதிகமுண்டு. இந்தக் காலத்தில் உற்பத்தியை அதிகரிக்கமுடியும்.

# இயற்கை உரங்கள்

## முதலீட்டுச் செலவைக் குறைக்கும்



தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் இலைகளைச் சேகரித்து - 10 அடி நீளம், 6 அடி அகலம், 4 அடி ஆழம் என்ற அளவில் குழிவெட்டி, இந்த இலைகளைச் சிறிதளவு பரப்பி பின் மண் தூவவேண்டும்.

இதேபோல் மீண்டும் சிறிதளவு இலைகளைப் பரப்பி மண் தூவவேண்டும். குழி நிரப்பும் வரை போட்டுத் தினமும் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

இலைகள் நாட்பட நாட்பட மக்கி உரமாக மாறும். இவ்வாறு பெறப்படும் உரத்தை எடுத்து, நிலத்துக்கு பயன்படுத்தலாம். இதனால் விளைச்சலை அதிகரிப்பதுடன், இரசாயன உரத்துக்காகச் செலவிடும் செலவைக் குறைத்து மண்வளத்தை அதிகப்படுத்தலாம்.

அடுத்த வகையான இயற்கை உரம், பயிர் செய்யும் காலத்துக்கு முன் இருக்கும் இடைப்பட்ட காலத்தில்,குறுகியகாலத் தாவரங்களை வளர்த்து, அதையே அந்த மண்ணுக்கு உரமாக மாற்றிவிடலாம்.

இவ்வாறு இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, முதலீட்டுச் செலவைக் குறைக்க முயலலாம். மேலும் விவசாயத்தைப் பொறுத்தவரையில் – ஆடு, மாடுகள் வைத்திருப்பது அவசியம். தன்னுடைய நிலத்தில் ஒரு சிறு பகுதியை மாடு, ஆடுகளுக்கு தீவனம் பயிரிடுவதற்காக ஒதுக்க வேண்டும். இதனால் ஆண்டு முழுவதும் தீவனத்துக்கு சிக்கல் வராது.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 60/= | 70/= | 40/= | 50/= | 50/= | 50/= |
| வெண்டிக்காய் | 15/= | 25/= | 30/= | 10/= | 15/= | 30/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 80/= | 80/= | 70/= | 80/= | 90/= | 85/= |
| கத்தரிக்காய் | 25/= | 25/= | 30/= | 20/= | 25/= | 20/= | 55/= |
| பாகற்காய் | 40/= | 60/= | 70/= | 60/= | 50/= | 50/= | 50/= |
| கரட் | 40/= | 50/= | 60/= | 40/= | 45/= | 60/= | 60/= |
| பீற்றூட் | 20/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 100/= | 120/= | 150/= | 120/= | 140/= | 100/= | 60/= |
| வெங்காயம் | 60/= | 50/= | 50/= | 60/= | 55/= | 50/= | 60/= |
| பச்சை மிளகாய் | 35/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= | 60/= |

தொழில்மலர்

# நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளில் திட்டமிடலினதும், முகாமைத்துவத்தினதும் அவசியமும், முக்கியத்துவமும்

அநேக அபிவிருத்தி நடவடிக்கைகள் இயற்கை வளங்களின் உபயோகத்துடன் சம்பந்தப்பட்டவை. இயற்கை வளங்கள் புதுப்பிக்கத்தக்கவை, புதுப்பிக்கமுடியாதவை என்ற இரு தொகுதியைக் கொண்டது. உயிரற்ற பதார்த்தங்களில் பெரும்பாலானவை புதுப்பிக்க முடியாதவை. செம்பு, ஈயம், தங்கம், கற்பாறைகள், இரும்பு, மலை ஆகியவை அதற்கு உதாரணமாகும்.

புதுப்பிக்க முடியாத உயிரற்ற வளங்கள் திட்டமான அளவுகளிலேயே உள்ளன. அதனை எந்த வகையிலும் அதிகரிக்க முடியாது. பூமியிலுள்ள செம்பின் மொத்தக் கணியம் திட்டமான அளவுடையது. அதன் ஒரு பகுதியை அழித்தால், அந்தளவு செம்பு நிரந்தரமாகவே இழக்கப்பட்டுவிடும்.

திட்டமான அளவுகளிலுள்ள கணியங்களை உடைய பதார்த்தங்கள் மிகக் கவனமாக எவ்வளவு காலத்துக்குப் பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு நீண்டகாலத்துக்கு உபயோகிக்கவேண்டும். அதேபோன்றுதான் மணலையும் பயன்படுத்தல் வேண்டும்.

திட்டமான கணியத்தைக்கொண்ட பதார்த்தங்களைச் சமூகத்துக்கு உச்ச நன்மை பயக்கத்தக்க வகையில், சிக்கனமாக உபயோகித்தலையே நிலைத்திருக்கத்தக்க உபயோகம் என அழைப்பது வழக்கம்.

நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி- நிலைத்திருக்கத்தக்க உபயோகத்தை அடிப்படையாகக்கொண்டது. திட்டமான அளவுகளில் பதார்த்தங்களின் உபயோகத்தைக் குறைப்பது, மாற்றுப் பதார்த்தங்களின் உபயோகத்தை அதிகரிப்பது, நிலைத்திருக்கவல்ல அபிவிருத்தியை அடைவதற்கு அத்தியாவசியம்.

**சூழலும் அபிவிருத்தியும் பற்றிய சர்வதேச செயற்குழு நிலைத்திருக்க வல்ல அபிவிருத்திக்குக் கொடுத்துள்ள வரைவிலக்கணம் வருமாறு –**

'வருங்கால சந்ததியினர் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யும் திறனைப் பாதிக்காத வகையில் இன்றைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் அபிவிருத்தியாகும்.'


இந்த வரைவிலக்கணம் இன்றைய அபிவிருத்தி வருங்கால சந்ததியினருக்குக் கிடைக்கவேண்டிய வளங்களை இல்லாமலாக்கலாகாது என்று கூறுகிறது.

எனவேதான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான அபிவிருத்தி மிகவும் முக்கியமானதாகும். ஆதலால் நாட்டை நிலையான அபிவிருத்தியினூடாகக் கொண்டுசெல்ல வேண்டுமானால், சூழலைத் திட்டமிடலும், முகாமைப்படுத்தலும் மிக முக்கியமானதாகும்.

சூழலைத் திட்டமிடலும், முகாமைசெய்தலும் தற்போது எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். இந்தக் கருத்தை அபிவிருத்தியடைந்த நாடுகள் முதலில் ஏற்றுக்கொண்டன. தற்போது வளரும் நாடுகளும், அவற்றுக்கு அதிகம் முக்கியத்துவம் வழங்குகின்றன. ஆதிகாலத்தில் சூழல் திட்டமிடலும், முகாமைத்துவமும் ஓரளவுக்குக் கையாளப்பட்டு வந்தது என்றே கூறலாம். அன்றைய மனிதன் சூழலை மதித்து, தனது அபிவிருத்தியை மேற்கொண்டான் என்பதற்கு சுமேரிய, எகிப்திய, இந்திய, சீன, கிரேக்க, உரோம் போன்ற புராதன நகரங்கள் எடுத்துக்காட்டாகும். ஆதிகாலத்தில் மனிதன் எவ்வாறு சூழலைத் திட்டமிட்டான் என்பதற்கு சுரிசோனா மலைப்பிரதேசத்தில் அமெரிக்க, இந்தியர்கள் அமைத்த வீடுகள் சிறந்த சான்றாகும். கோடைகால வெயில் உள்ளே செல்லாமலும், பனிக்கால வெயில் நேரே உள்ளே சென்று வெப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் மலைச்சாரலுக்குள் குடைந்து தமது இல்லங்களை அவர்கள் அமைத்திருந்தார்கள்.

ஒரு அபிவிருத்தித் திட்டத்தையோ அல்லது வேறு திட்டங்களையோ ஒரு சூழலில் அமைக்கும்போது, அந்தச் சூழலில் அந்த அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளலாமா? மேற்கொள்ள முடியாதா? மேற்கொண்டால் அந்தச் சூழலில் ஏற்படும் விளைவுகள் எவை என்பவற்றை அறிதலே சூழலைத் திட்டமிடலாகும்.

அது மட்டுமல்லாது, அந்தச் சூழலில் சாதகமாக அமையக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களையும் இனங்காணக்கூடியதாக இருக்கும். அந்தச் சூழலில் குறிப்பிட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியுமென்றால், தொடர்ந்தும் அந்த அபிவிருத்தித் திட்டத்தால் ஏற்படும் பாதக விளைவுகளைக் குறைத்து, அபிவிருத்தியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள எடுக்கும் நடவடிக்கை முகாமைத்துவமாகும்.



ஆதலால் எப்பொழுதும், ஒரு விடயத்தை மேற்கொள்ளமுதல் சூழலைத் திட்டமிடுதல் வேண்டும். இயற்கை வளங்களை உபயோகிக்கும்போது, அந்த உபயோகம் சூழலைப் பாதிக்கின்றதா என்பது கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

இந்த அவதானம் திட்டமான அளவுகளிலுள்ள வளங்களின் உபயோகத்தின் போது, அதிகளவில் இருத்தல் வேண்டும் என்பதாகும்.

சூழலைத் திட்டமிடல், அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடத்தையும், பிரதேசத்தையும் பொறுத்ததாகும். வெற்றுக் காணியொன்றில் புதிய கட்டடம் கட்டுவதில் சூழலைத் திட்டமிடல் அதிக முக்கியத்துவமில்லை.

புதிய கட்டடத்துக்கு நீரையும், மின்சாரத்தையும் பெறுதல், அதிலிருந்து கழிவு நீரையும், கழிவுப் பொருட்களையும் வெளியேற்றல் ஆகிய பிரச்சினைகளை சமாளித்தால் போதுமானது. ஆனால், ஈர நிலப்பகுதியிலோ, விவசாயக் காணியிலோ வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளும்போது, சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுவதால், அந்தச் சூழல் திட்டமிடப்படுதல் முக்கியமாகும்.

உதாரணமாக - ஒரு ஈரநிலப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்ளுவதானால், அங்கு வாழும் பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாதவகையில் சூழலைத் திட்டமிடுதல் வேண்டும்.

இந்தத் திட்டமிடலால் சூழலில் ஏற்படும் பாதிப்பு மிக அவதானமாகக் கருதப்படல் வேண்டும்.

அடுத்ததாக இலங்கையின் நிலப்பரப்பு குறிப்பிட்டளவுடையது. அதை அதிகரிக்க முடியாது. உண்மையில் அது குறைந்தே செல்கிறது. கடலரிப்பு, பள்ளமான பகுதிகள், நீர்தேங்கி ஏரிகளாதல் ஆகியன நிலப்பரப்பைக் குறைக்கின்றன. எனவே நிலமானது திட்டமிடப்பட்டு, உபயோகிக்கப்படுதல் வேண்டும். நில உபயோகத் திட்டங்களை மேற்கொள்ளும்போது, நான்கு அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

1. காணி உபயோகத்தின் நோக்கம், பிரச்சினைகள் ஆகியவற்றைத் திட்டமிடுதல்.

2. சேகரிக்கப்பட்ட பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகளைச் சுருக்கமாகத் தொகுத்தல்.

3. நிலப்பாகுபாட்டு வரைபடம்.

4. அபிவிருத்தி செய்யப்படவுள்ள நிலத்தின் சிறப்பான சூழல்.

நிலத்தின் உபயோகத்தை இனங்கண்டபின், அந்த நிலம் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்து, அந்த நிலம் குறிப்பிட்ட உபயோகத்துக்கு உகந்ததா என்பதை ஆராய்தல் வேண்டும்.

சூழல் திட்டமிடலில் அடுத்த முக்கியமான விடயம் சூழல் தாக்க மதிப்பீடாகும். (Environmetal Impact Assessment) அபிவிருத்தித் திட்டங்கள் உருவாகும்போது, வெவ்வேறு சூழல் காரணிகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை இந்த உபயோகத் திட்டங்கள் மூலம் மதிப்பிடமுடியும். இதனால்தான் இலங்கை உட்பட, பல நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு முன், சூழல் தாக்க மதிப்பீடு (EIA) செய்யப்படுவது சட்டத்தின் மூலம் வற்புறுத்தப்படுகிறது.

EIA ஆனது அபிவிருத்தித் திட்டங்களால் சூழலில் ஏற்படும் தாக்கத்தை மதிப்பிடுகிறது.

அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழலில் நல்ல விளைவுகளையும், சில சந்தர்ப்பங்களில் தீய விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

EIA மூலம் இந்தத் தீய விளைவுகள் இனங்காணப்பட்டு, பின் அந்தத் தீய விளைவுகளைக் குறைப்பதற்கோ, இல்லாமல் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கலாம்.

மனித நடவடிக்கைகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் மனித நடவடிக்கையாலேயே தொடர்ந்தும் சூழல் பாதிக்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் 1969 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய சூழல் கொள்கையின் பின்பு, சூழல் பாதிப்பு பிரபல்யமடைந்துள்ளது. மனிதனின் சூழல் பண்பைப் பாதிக்கும் நடவடிக்கைகள் யாவும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று அந்தச் சட்டம் கூறுகிறது.

இந்த மதிப்பீட்டு EIA எனவும், அந்தச் சூழல் பாதிப்பு நிலை, சூழல் தாக்கநிலை (Environmental Impact Stage) எனவும் அழைக்கப்படுகின்றன.

**EIA இன் முக்கிய அம்சம் வருமாறு –**

1. ஏற்கனவேயுள்ள சுழல் பற்றிய விபரம்.

2. அபிவிருத்தி நடவடிக்கையின் விபரணமும், அந்த நடவடிக்கையின் நோக்கமும்.

3. அந்த நடவடிக்கை மூலம் ஏற்படும் நன்மைகள்.

4. அபிவிருத்தி நடவடிக்கையால் ஏற்படும் விளைவுகள்.

5. அபிவிருத்திச் சூழலில் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால, குறுகியகால பாதிப்புகள்.

6. அபிவிருத்தி நடவடிக்கையின் பின் சம்பந்தப்பட்ட பிரதேசம் எவ்வாறு இருக்கும் என்பதையும், அபிவிருத்தி செய்யாவிடின் எவ்வாறு இருக்கும் என்பதையும் காட்டும் கணிப்பீடுகள்.

7. குறித்த அபிவிருத்தி நடவடிக்கையைத் தொடர்ந்து செய்தமைக்கான காரணம், அதற்குப் பதிலாக வேறு மாற்றுத் திட்டங்கள் கையாளப்பட்டால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பது பற்றிய மதிப்பீடு.

8. பாதகமான விளைவுகளைக் குறைக்க அல்லது தீர்க்க எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள். (தொடரும்...)

அ.தமிழ்ச்செல்வி
பி/சுற்றாடல் உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

# தமிழீழ அரசின் அடித்தளமாக வைப்பகங்கள் விளங்குகின்றன

## அரசறிவியல் கல்லூரியின் விரிவுரையாளர் அரசண்ணா

கிளிநொச்சி—

தமிழ் மக்களினதும், தமிழீழ அரசினதும் அடித்தளமாக தமிழீழ வைப்பகம் திகழ்கிறது என்று தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா புகழாரம் சூட்டினார்.

பரந்தனில் நேற்று முன்தினம் நடந்த தமிழீழ வைப்பகத்தின் 12ஆவது கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது உயிர்களை ஆகுதியாக்கிய கரும்புலி மாவீரர்களை நினைவு கூரும் இந்த நாளில், தமிழீழ வைப்பகத்தின் கிளையொன்று பரந்தனில் திறக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

கடந்தகால போர் நெருக்கடிகளின் போது, அரச வங்கிகள் தமிழ் மக்களிடம் இருந்து திரட்டும் நிதியை தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்கும் போது, தமிழ் மக்களின் பணமே தமிழ் மக்களுக்கெதிராகப் பயன்படுத்தப்பட்டதை நாம் அறிவோம்.

இந்த நிலையில் எமது விடுதலை அமைப்பு - தமிழீழ வைப்பகத்தை ஆரம்பித்து, தமிழ் மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது.

தமிழ் மக்களுடையதும், தமிழீழ அரசினதும் அடித்தளமாக தமிழீழ வைப்பகம் விளங்குகின்றது.

அடுத்த ஆண்டில் தமிழீழ வைப்பகம் 13 கிளைகளை ஒரே ஆண்டில் திறக்கவேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அதனுடைய செயற்பாடுகள் மக்கள் நலன் சார்ந்தவையாக இருக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழீழ காவல் துறையினரால் வீதிப் போக்குவரத்து கருத்தூட்டல்

கிளிநொச்சி—

தமிழீழ காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவினர் தமிழீழ வைப்பகம், நடுவப் பணியகம் மற்றும் கிளைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வீதிப் போக்குவரத்து, ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாதசாரிகள், சைக்கிள் ஓட்டிகள், சாரதிகள் ஆகியோர் வீதியில் போக்குவரத்து செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் தொடர்பாக தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமாரன் கருத்துரைகளை வழங்கினார்.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வில் கிளிநொச்சி, மல்லாவி, பூநகரி, முழங்காவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, புளியங்குளம், விசுவமடு ஆகிய கிளைகளில் பணிபுரியும் பணியாளர்களும், நடுவப்பணியகத்தில் பணிபுரியும் பணியாளர்களும் என 200 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் இந்தக் கருத்தூட்டல் தமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததென கருத்துத் தெரிவித்தனர்.

# குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

மாங்குளம்—

மாங்குளம், துணுக்காய் வீதிகள் புனரமைக்கப்பட்ட போதிலும், வடிகால்கள் அமைக்கப்படாததால், சேதமடைந்து பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. வடிகால் அமைக்கப்படாததால், மழைநீர் வழிந்தோட முடியாது வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்தோடுகிறது. வீதியில் ஆங்காங்கே பாரிய குழிகள் காணப்படுவதால், இந்த வீதியூடாகப்பயணம் செய்வோர் விபத்துக்களுக்கு உள்ளாகின்றனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி பொதுமக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வட்டக்கச்சி - கட்சன் பிரதேசத்தில் அறிவாலயம், முன்பள்ளி திறப்பு!

கிளிநொச்சி—

வட்டக்கச்சி - கட்சன் வீதி அமரர் பரஞ்சோதி மகேந்திரவரதன் ஞாபகார்த்தமாக, அவரது சகோதரர் கலியுகவரதனின் நிதியுதவியுடன், கிளிநொச்சி கிழக்கில் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் மகேந்திரவரதன் அறிவாலயமும், அஞ்சனா முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழாவும் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டோர் சோதி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து, வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை மகேந்திரவரதனின் தந்தை பரஞ்சோதி, துணைவியார், கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம், ஆரம்பப் பிள்ளைப் பருவப் பணிப்பாளர் பாண்டியன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், அரச, அரச சார்பற்ற இணையங்களின் பணிப்பாளர் கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொதுச்சுடரை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணனும், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கெங்காதரனும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆரம்பப்பிள்ளைப்பருவப் பணிப்பாளர் பாண்டியனும், முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியர் கஜேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.


அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து, ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

கட்டடத்தின் பெயர்பலகையை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

மகேந்திரவரதன் அறிவாலயக் கட்டடத்தை சகோதரனான கலியுகவரதனும், அஞ்சனா முன்பள்ளிக் கட்டடத்தை அஞ்சனாவின் சகோதரன் பத்ம காந்தனும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன், கலியுகவரதன், கிளிநொச்சி மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம், ஆரம்பப் பிள்ளைப் பருவப் பணிப்பாளர் பாண்டியன், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தக் கட்டடத்தை தனது சொந்தச் செலவில் கட்டிய கலியுகவரதனுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன், பயனாளி ஒருவருக்கு போரூட் நிறுவன பிரதிநிதி வாணி துவிச்சக்கரவண்டியை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

- இராமநாதபுரம் செய்தியாளர்

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜீலை - 07

1814 : உலகின் முதலாவது வரலாற்று நாவல் "வேவர்லி" எடின்பார்க்கில் வெளியிடப்பட்டது. இது வால்ட்டர் ஸ்காட் என்பவரால் எழுதப்பட்டதாகும்.

1834: துணிவகைகளை நெசவிடக்கூடிய "ஜாக்யூவார்ட்" எனப்பட்ட தனி ஒரு மனிதனால் இயக்கக்கூடிய நெசவுத்தறியை முதன் முதலாக வடிவமைத்துத்தந்த பிரான்ஸைச் சேர்ந்த "ஜோஸம் மேரி ஜாக்யூவார்ட்" காலமானார்.

1849 : உலகின் முதன்முதலாக இலவச பொதுநூலகச் சட்டம் நியூ ஹாய்ப்ஷையரில் நிறைவேற்றப்பட்டது.

1854 : "ஓம் விதியை" வகுத்துத்தந்த ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி "ஜோர்ஜ் சைமன் ஓம்" மரணமானார்.

1898 : ஹவாயை அமெரிக்கா கைப்பற்றிக்கொண்டது.

1917 : லண்டனில் பிற நாட்டின்ரை எதிர்த்து பெரும் கலவரம் மூண்டது. கடைகள் அடித்து நொருக்கப்பட்டன.

1918 : ஸ்பெயினில் பிற நாடுகளுக்காக உளவு வேலைகளில் ஈடுபடுபவர்களைக் கண்டு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

1919 : முதலாவது உலக யுத்தம் காரணமாக பிரிட்டனில் கட்டாய இராணுவ சேவையில் அமர்த்தப்பட்டவர்கள் அந்தப் பணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

* : வேலை இல்லாப் பெண்களுக்கு பயிற்சியளித்து, மானியத் தொகை வழங்க பிரிட்டிஷ் அரசு தீர்மானம் செய்தது.

1937 : சீனா மீது ஜப்பான் தாக்குதலைத் தொடங்கியது.

1941: பிரிட்டிஷ் படைகளிடம் இருந்து ஐஸ்லாந்தின் நிர்வாகத்தை அமெரிக்கப் படைகள் பொறுப்பேற்றுக்கொண்டன.

1970 : குறைந்த விலையில் சிறந்த நூல்களை வெளியிடும் நோக்குடன் "பென்குயின்" பதிப்பகத்தை ஆரம்பித்த லண்டனைச் சேர்ந்த அலன் லேன் காலமானார்.

1976 : 21 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் கனடாவில் மொன்றியல் நகரில் ஆரம்பமாகியது.

1977 : "நியூட்ரோன் முகப்பு ஏவுகணை" அமெரிக்காவால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

1981 : அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட சூரிய சக்தியால் இயங்கக்கூடிய "சோலர் சலெஞ்சர்" என்ற விமானம் முதன் முதலாகப் பறப்பிலீடுபட்டது.

1988 : செவ்வாய்க் கிரகத்தை ஆராயவும், அதன் சந்திரன்களில் ஒன்றான போபாஸைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் ரஷ்யா போபாய் - 1 என்ற விண்கலத்தை அனுப்பியது.

1990 : விம்பிள்டன் ஒற்றையர் ஆட்டப் போட்டியில் மார்ட்டினா நவரத் லோவா ஒன்பதாவது முறையாக வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றார்.

1994 : மனைவியை விவாகரத்துச் செய்தாலும், இளவரசர் சார்லஸ் இங்கிலாந்து மன்னராகப் பதவி ஏற்கத் தடையில்லை என பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அறிவித்தது.

* : சொலமன் தீவுகள் சுதந்திரதினம்.

தொகுப்பு - சந்துரு

# பொன்னம்பலம் மருத்துவமனையில் அமெரிக்க நிபுணர்களால் சிகிச்சை

புதுக்குடியிருப்பு—

புதுக்குடியிருப்பு டொக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில், அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்திருக்கும் சிறுநீர்வழி சத்திர சிகிச்சை, என்பு, மூட்டு சத்திர சிகிச்சை நிபுணர்களால் விசேட சத்திர சிகிச்சைகள் - கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி இன்று வரை தினமும் காலை 8 மணி முதல் மதியம் 12.00 மணிவரை நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட நோயாளர்கள், முக்கியமாக சிறுநீர் சம்பந்தமான நோயாளர்கள், கேணியா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், முறிவு, மூட்டுகளில் நோ, மூட்டு விலகல் போன்ற என்பு சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர்களுக்கும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படின் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

மக்கள் நலன்கருதி சத்திர சிகிச்சைகள் இலவசமாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளி நோயாளர் பகுதியில் தொடர்பு கொள்ளுமாறு, புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். *

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## முஸ்லிம் மக்களின் சிந்தனைக்குரிய 'பஷீர் சேகுதாவூத்'தின் அறிவுறுத்தல்...!

பொதுக்கட்டமைப்பு சம்பந்தப்பட்ட விடயத்தில் முஸ்லிம் மக்கள் தரப்பின் கோரிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படவில்லை என்ற அதிருப்தி அவர்களுக்கு நிறையவே உண்டு. ஆனாலும், இதற்கு தமிழர் தரப்பு எந்த விதத்திலும் பொறுப்பில்லை என்பதையும், இதற்கு முழுக்காரணம் பேரினவாத தலைமைகளே என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பது நிறைவான விடயமேயாகும்.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் அவர்கள் - ஏறாவூரில் ஒரு பொதுக்கூட்டத்தில ஆற்றிய உரைபற்றி இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம் மக்களுக்கு நியாயம் கிடைக்காமல் போனமைக்குக் காரணமாகவிருந்த பேரினவாதிகள் - முஸ்லிம் மக்களைத் தூண்டிவிட்டு தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தி, அதில் குளிர்காய நினைக்கினறார்கள். குறிப்பாக, ஜே.வி.பியினர் இத்தகைய நடவடிக்கைகளிலேயே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என அவர் கூறியிருப்பது குறித்தும் அதன் உண்மைத் தன்மை குறித்தும் முஸ்லிம் மக்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய கட்டம் உருவாகியுள்ளது.

அவர் அங்கு மேலும் பேசுகையில் - பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கையொப்பமிட முஸ்லிம் தரப்பினரும் அனுமதிக்கப்படுவர் என்றும், இந்த ஒப்பந்த ஆவணத்தில் தமிழர்களுக்குச் சமனான அந்தஸ்து வழங்கப்படுமென்றும் ஜனாதிபதி அவர்கள் முஸ்லிம் அமைச்சர்களுக்கு வாக்குறுதியளித்ததாகவும் தெரிவித்ததுடன, இப்படி அவர் வாக்குறுதி அளித்தமைக்கும் -பினனர் அதனை உடனே மீறியதற்கும் தமிழர்தரப்பு எந்த விதமான பொறுப்பையும் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையையும் உறுதிசெய்துள்ளார்.

இன்றைய சூழலில், இந்தச் செய்தி முஸ்லிம் மக்களின தமிழர் தரப்பு தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்வதாக மட்டுமல்ல, பேரினவாதிகள் எப்படியெல்லாம சிறுபான்மை சமூகத்தவரை ஏமாற்றி, அவர்களிடையே 'மித்திரபேதம்' என்ற பஞ்சதந்திர உத்திகளில் ஒன்றைப பயன்படுத்தி பிளவுகளையும், முரண்பாடுகளையும், மோதல் நிலையையும் உருவாக்கும் இலக்குடன் அரசியல் வியூகங்களை வகுத்துச் செயற்பட்டு வருகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எபபோதுமே ஆளும் வர்க்கத்துடன், ஆட்சியில் இருககும் அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்கள் உட்பட பல்வேறு அதிகாரபலம்கொண்ட நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுச்செயற்படும் முஸ்லிம் அரசியற் கட்சிகளின் தலைமைகள் - வடக்கு - கிழக்கில் தமிழினத்துக்கு எதிரான பேரினவாத ஆட்சியாளர்கள், இரு தசாப்தத்திற்கும் அதிககாலமாக மேற்கொண்ட ஜனநாயத்திற்கு எதிரான - காட்டுமிராண்டித்தனமான போர் நிகழ்ந்த காலத்திலும் ஆளும் அதிகார அரசுடன் ஐக்கியப்பட்டே செயற்பட்டுவந்தார்கள்.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் தமிழர்கள்தான் என எண்ணிப்பார்த்து அநதப் போருக்கெதிராக - இப்போது பொதுக் கட்டமைப்புக்கும், அரசுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுவது போன்று கொதித்தெழுந்தது கிடையாது.

எப்போதும் ஆளும் பேரினவாதத் தலைமைகள் தமிழர்கள் ஒரே மொழியின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட விரும்பியது கிடையாது. அவர்களிடையே பிரித தாளும் தந்திரோபாயத்தை மதரீதியாகக் கையாண்டு, முரணபாடுகளை வளர்ப்பதன்மூலம் - தமது சுயநல அரசயல் அனுகூலங்களை வென்றெடுப்பதிலேயே குறியாக இருந்தனர்.

முஸ்லிம் மக்கள் அரசின் இந்தச் சதியைப் புரிந்து கொள்ளாததாலேயே தங்களுக்குள் தாங்களே முரணபட்டுமோதும் அவலநிலை ஏற்படக் காரணமானார்கள் என்பதும் நிஜமே...!

இநத நிலையில், இப்போது பொதுக்கட்டமைப்பு உடனபாடு காரணமாக முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனத்தாக்கங்களை, தமிழ் - முஸ்லிம் மக்களை நிரந்தரமாகப் பிரிக்க ஒரு வாய்ப்பாகப் பேரினவாதிகள் பயனபடுதத முனைவதை பஷீர் சேகுதாவூத் அவர்கள் மிகத தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளமையாலேயே, 'பேரினவாதிகளின் தந்திர வலையில் முஸ்லிம்கள் சிக்காமல் இதனை தமிழ் முஸ்லிம் உறவை இறுக்கமாக வலுப்படுத்தக் கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்த முன்வர வேண்டும்' என்று அறைகூவல் விடுத்துள்ளார் என நம்பலாம்

ஜே.வி.பி போன்ற பேரினவாத சக்திகளின் தமிழ் மக்களுக்கு எதிரான முஸ்லிம்களைச் செயற்படத் தூணடும் இனவாத தந்திரோபாயத்துக்கு முஸ்லிம்கள் ஆட்பட்டுவிடக்கூடாது என்ற அவரது அறிவுறுத்தல் குறித்து முஸ்லிம் மக்கள் ஆழமாகவும், அறிவுபூர்வமாகவும் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# ஆயுதங்களைக் களைவது எப்போது இது கதிர்காமருக்குத் தெரியாதா?

நம் கதிர்காமரின் பேச்சையும் மூச்சையும் கொஞ்ச நாளாய்க் காணவில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தன். அவர் முன்னையப் போல இப்ப வெளிநாடுகளுக்கு அடிக்கடி பறந்துபோய் "பயங்கரவாதிகள்" பேசித் திரிந்தாலும் ஊடகங்களில் செய்திகள் வரும். இப்ப அதையும் காணேல்ல. ஒருவேளை அந்த மனுசனுக்கு சுகமில்லையோ என்று கூட நினைச்சன். ஆனால் அவர் லேசுப்பட்ட ஆளில்லை. தன்னை மறந்திருந்தாலும் கூட எல்லோரும் தன்னைப் பற்றிப் பேசக்கூடிய மாதிரி ஒரு கட்டுரையை எழுதிவிட்டார்.

சந்திரிகா அம்மையாரின் 60 ஆவது மணிவிழா சம்பந்தமாக வெளிவந்த ஒரு மலரில் கதிர்காமர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறாராம். சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக இருக்கும் நோர்வே தரப்பினர் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்று கதிர்காமர் இந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார். இலங்கையின் வடக்கு கிழக்கில் ஜனநாயத்தை ஏற்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டும். இவற்றைச் செய்யமுடியாவிட்டால் இவற்றைச் செய்யக் கூடியவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு நோர்வேயினர் வெளியேறவேண்டுமென்று கதிர்காமர் அம்மையாரின் மணிவிழா மலரில் எழுதியிருக்கிறார். என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

அவருக்கு என்ன நேரத்தில் எதை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது தெரியும். கதிர்காமரைக் காணோம் என்று யோசித்தவர்கள் இப்பொழுது கதிர்காமரைப் பற்றித்தான் பேசுகிறார்கள். நேற்று வெளிவந்த கொழும்பு ஆங்கில தினசரியொன்றில் கதிர்காமருக்கு சலாம் என்றொரு கடிதம் வெளிவந்திருக்கிறது. இப்படித் துணிச்சலாக கதிர்காமரைத் தவிர வேறு யார் சொல்லுவார்கள் என்று கொழும்பு ஏ.டி.டி.சில்வா என்பவர் இக்கடிதத்தை எழுதியிருக்கிறார் என்றேன்.

விடுதலைப் புலிகளுக்கு நோர்வேயினர் சார்பாக நடக்கிறார்கள் என்று ஜே.வி.பி, ஹெல உறுமயக்காரர்கள் ஏற்கனவே குற்றம்சாட்டி வந்திருக்கின்றனர். ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர். நோர்வே தேசியக் கொடியை எரித்திருக்கின்றனர். இப்பொழுது கதிர்காமரும் நோர்வே வெளியேறவேண்டுமென்றால் தி ஐலன்ட் போன்ற பத்திரிகைகளுக்கு சொல்லவா வேண்டும். இது மட்டுமல்ல - நோர்வேயிலிருந்து இலட்சக் கணக்கில் நோர்வே பணம் மாதாமாதம் விடுதலைப் புலிகளுக்கு வந்துகொண்டிருப்பதாக இதே ஐலன்ட் பத்திரிகை நேற்றுக் கொட்டை எழுத்தில் தலைப்புச்செய்தியும் வெளியிட்டிருந்தது.

இலங்கையில் நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், நோர்வேயிலுள்ள தமிழர்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் படைகளுக்கும் காவல்துறையினருக்கும் இலட்சக் கணக்கில் நோர்வே குரோணர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று நோர்வேயின் பிரபல செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாக தி ஐலண்ட்டின் தலைப்புச் செய்தி தெரிவிக்கிறது என்று பரமசிவம் எடுத்துக்காட்டினார்.

இதேசமயம் வடக்கு கிழக்கில் ஜனநாயகம் மீண்டும் செயல்படவேண்டும். இல்லையேல் இதைச்செயல்படுத்தக் கூடியவர்களிடம் இப்பொறுப்பை ஒப்படைத்து விட்டு நோர்வே ஒதுங்கிக்கொள்ளவேண்டும் என்று கதிர்காமர் எழுதியிருந்தார். விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டுமென்றும் கதிர்காமர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னேன்.

இவற்றை எப்படிச் செய்யலாம் என்று கதிர்காமர் எழுதியிருக்கமாட்டார். தம்மிடம் இது பற்றி யோசனை கேட்கலாமென்றும் அவர் சொல்லியிருக்கமாட்டார். ஏனெனில் ஜனநாயகம் வடக்கிலும் கிழக்கிலும் கொடிகட்டிப் பறந்த காலத்தில்தான் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளின் காதில் தமிழ்மக்களின் குரல் கேட்கவில்லை.

இலங்கையின் ஆட்சிப்பீடத்திலிருந்த அரசாங்கங்களுக்கு துப்பாக்கிவேட்டுச் சத்தத்தின் ஒலிதான் கேட்கும். என்று தமிழர் கூட்டமைப்ப எம்.பி.யான சுரேஷ் பிரேமச்சந்திரன் அளித்த போட்டியொன்றிலிருந்து ஒரு பகுதியை இதே பத்திரிகைதான் வெளியிட்டும் இருந்தது.

இதிலிருந்து ஜனநாயகமுறையில் தமிழ் மக்களின் குரலுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை என்பது தெளிவு ஜனநாயக வழிமுறைகள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் பின்பற்றிவெற்றி பெறமுடியாமல் போய்விட்டது.

இதைத் தொடர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் சாத்தீகப் போராட்டங்களையும் நடத்திப் பார்த்தார்கள். இவையாவும் வெற்றிபெறாததால்தான் தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். தமிழ் மக்கள் உரிமைகளுடன் வாழத் தொடங்கும் வரை எப்படி ஆயுதங்களைக் கீழே போடமுடியும்? எப்படி ஜனநாயகமும் ஏற்படமுடியும்? இது கதிர்காமருக்கும் தெரியும். என்றார் பரமசிவம்.

கதிர்காமர் மட்டுமல்ல எந்தப் பிரச்சினையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் இந்த ஐலன்ட் பத்திரிகைக்கு முதலிடம் கொடுக்கலாம். அதுவும் இனப் பிரச்சினையில் இது வெறியையூட்ட தவறுவதில்லை.

பொதுக்கட்டமைப்புடன் ஆயுதப் படைகளைக் கூடச் சிண்டு முடிந்து செய்து வெளியிட்டதென்றால் இதைப் பற்றி வேறுஎன்ன சொல்வது என்று சொல்லிக் கொண்டே பரமசிவம் நடந்தார்.

## கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு எப்போது கஷ்டப்படி கிடைக்கும்!

**வாசகர்நோக்கு**

கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சிறுதொகைக் கஷ்டப்படியும் நின்றுவிட்டது. பெருந்தொகை கஷ்டப்படியும் வழங்கப்படவில்லை.

கடல்துன்பம், தரைமார்க்கப் போக்குவரத்துத் துன்பம் எனப் பல துன்பங்களைச் சுமந்து, காலை 6 மணிக்கு புறப்பட்டால், மாலை 6 மணிக்கு வீடுவந்து சேரும் இந்தத் தீவக வலய கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேசப்படி உயர்த்தப்படப்போவதாக அறிவித்து முன்பிருந்த சிறுதொகைப்படியும் நிறுத்தப்பட்டது. தற்போது எந்தவித படிகளும் வழங்கப்பட்டதாக இல்லை. கல்வியமைச்சால் கஷ்டப்பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்கு 1500 ரூபா எனவும், அதி கஷ்டப் பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்கு 2500 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டது.

பின்பு இப்படிக்கான பணங்களை வலயங்களுக்கு அனுப்பவில்லை. ஏதோ கருத்துமுரண்பாடு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என தமிழராசிரியர் சங்கம் அறிவித்தது. எது எப்படியென பாவப்பட்ட இந்த ஆசிரியர்களுக்குத் தெரியாது. ஒன்றில் முறையான இடமாற்ற ஒழுங்குமுறை வேண்டும். இல்லையேல் போக்குவரத்து செலவுக்காக இப்படி வழங்கப்பட வேண்டும்.


தொடர்ந்து ஒரு சில வலய ஆசிரியர்கள் சுகபோகத்தை அனுபவிக்கின்றார்கள். தொடர்ந்து ஒருசில வலய ஆசிரியர்கள் துன்பத்தை அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலை எப்போது மாறப்போகிறது. எல்லாம் பேச்சு வடிவத்தில்தான் இருக்கிறது ஆனால் செயற்படுத்தத் துணிந்தவர் யாருமில்லை.

**வெண்கட்டியன் (கைதடி)**

அரசியற் கட்டுரை...

கே.ரீ.கணேசலிங்கம்

# சர்வதேச சமூகத்தின் பலப் பரீட்சையின் இன்னொரு வடிவமே பொதுக்கட்டமைப்பு





பொதுக்கட்டமைப்புக்கான உடன்பாடு பூர்த்தியாகி விட்டது. இதனால் தென் இலங்கை குழப்பத்துக்குள்ளும், நெருக்கடிக்குள்ளும் அகப்பட்டுத் தவித்தது. தற்போது நிலைமை தணிந்து விட்டது. ஜனாதிபதியும் அவரது அரசியல் எதிரிகளும், நண்பர்களும் அமைதியாகி விட்டார்கள். நோர்வேக்கும், அதனோடு சம்பந்தப்பட்ட சர்வதேச சமூகத்துக்கும் வேலை முடிந்தது போல் காட்சி தெரிகின்றது.

இவ்வாறு இலங்கையிலும், உலகத்திலும் பிரபலமாக பேசப்பட்டு, பின்னர் கையெழுத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு (JM) பற்றிய தாக்கம் தமிழ் மக்களை எப்படிப் பாதிக்கப் போகின்றது என்பதை விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

இந்தப் பகுதியில் பொதுக்கட்டமைப்பினுள் அடங்கியுள்ள விடயங்களைப் பற்றியோ, அதன் கட்டமைப்புப் பற்றியோ கருத்துக் கூறப்போவதில்லை. மாறாக - பொதுக்கட்டமைப்பு என்பது உள்ளார்ந்த நோக்கில் எதை நோக்கி நகர்ந்துள்ளது என்பதையே கவனத்தில் கொள்ள முயல்கின்றது. ஏனெனில் இலங்கையின் ஆட்சியாளர்கள் எந்த உடன்படிக்கையையும் முழுமையாகவோ, தெளிவாகவோ அமுலாக்குவதுமில்லை, நடைமுறைப்படுத்துவதுமில்லை. அவர்கள் உடன்பாடுகளை எழுதுவதும் பின்னர் அதை வைத்து அரசியல் இலாபத்தை பெறுவதுமே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளனர். 1956-2002 உடன்பாடு வரை இதனையே தமிழ் மக்கள் கண்டுள்ளனர்.

அப்படியானால் ஏன் உடன்பாடுகளில் கையெழுத்து இடுகின்றனர்.

உடன்படிக்கைகளின் உள் நோக்கங்கள் எப்படியானது என்பதை புரிந்தால் இதனை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

பிரான்ஸ் புரட்சியாளன் ஒருவன் குறிப்பிடும் போது - உடன்பாடு எழுதப்பட்ட மை காய முன்பு இறந்த போராளியின் உடலில் விறைப்பு ஏறிவிடும் என்று உடன்படிக்கையின் வலிமையற்ற தன்மைகளை வெளிப்படுத்தினான். இத்தகைய வலிமையற்ற, பயனற்ற பொருத்தமற்ற உடன்படிக்கையே தீர்வுக்கான உபாயங்களாக உள்ளன.

நாடுகளுக்கிடையில் செய்யும் உடன்படிக்கைகள் கூட உறுதியற்ற தன்மையைப் பெறும் போது - ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களின் அமைப்போடு எட்டப்பட்ட உடன்பாட்டை எப்படி பலவீனமாக்கும் என்பதில் தெளிவு ஏற்படுதல் வேண்டும். அதுவும் போராட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டு வரும் நாடுகளும், சக்திகளும் இசைந்து இந்த உடன்பாட்டுக்கு வந்திருப்பதென்பது சிந்திக்கப்பட வேண்டிய ஓரம்சமே ஆகும். இதேபோன்று பல நாடுகளில் தேசிய விடுதலை வேண்டிய மக்களும், விடுதலைப் போராட்ட அமைப்புக்களும் நெருக்கடியை சந்தித்துள்ளதுடன் மீளமுடியாத நெருக்கு வாரத்துக்குள் அகப்பட்டுள்ளன. அந்தளவுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டமும், விடுதலை அமைப்பும் இல்லாது விட்டாலும் சர்வதேசமும் இலங்கையும் அதற்கான உபாயங்களுக்கான வழிமுறைகளாகவே உடன்படிக்கைகளைக் கருதுகின்றன. அதனை விரிவாகப் பார்ப்போம்.

புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாகி விட்டது. அது பல தடவை முறிவடையும் நிலையை சந்தித்தது. குறிப்பாக உடன்படிக்கையின் கணிசமான அம்சங்கள் அமுலாக்கப்படவில்லை என்ற நிலை எழுந்தபோது புரிந்துணர்வு உடன்பாடு நெருக்கடிக்குள்ளானது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பேச்சுக்கள் முறிந்த போது புரிந்துணர்வு உடன்பாடு மீண்டும் நெருக்கடிக்குள் அகப்பட்டது. அதனை சரி செய்யும் நிலைக்குள் இலங்கையும், உலகமும் மும்முரமாகச் செயற்பட்ட போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ரணில் அரசை கலைத்த போது மீண்டும் புரிந்துணர்வு உடன்பாடு நெருக்கடிக்குச் சென்றது. ரணில் விலகியமை, நோர்வே தற்காலிகமாக விலகியதாக அறிவித்தமை என்பன ஒரு காலத்தின் நெருக்கடியாக மாறியது.

மீண்டும் சுதந்திர மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு ஏற்பட்ட கிழக்கின் அரசியல் சூழல் புரிந்துணர்வு உடன்பாடிக்கைக்குச் சிக்கலைக் கொடுத்தது. கருணா குழுவை முன்னிறுத்திக் கொண்டு நிழல் யுத்தம் நிகழ்த்திய அரசாங்கத்தால் அந்த நெருக்கடி ஏற்பட்டது. பின்னர் நிலைமையை ஜனாதிபதி பாராமுகமாக கையாளும் போது சுனாமி குறுக்கிட்டது.

சுனாமி நிரந்தரமான ஓய்வு நிலையை புரிந்துணர்வு உடன்பாடு ஏற்படுத்தினாலும், அதற்கான நிவாரணக் கட்டமைப்பு மீண்டும் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு சிக்கலைத் தந்தது. அதனோடு நிழல் யுத்தம் தொடர்ந்தது. விடுதலைப் புலிகளின் அரசியற் போராளிகளை இலக்குவைத்து தாக்குதல் தொடர்ந்தது. தென்னிலங்கை, பொதுக்கட்டமைப்புக்கான யோசனையை நிராகரித்தது. தீவிர பேரினவாதிகளின் குரல் வளர்ச்சியடைந்தது. அடிப்படை உபாயமின்றி ஆட்சி குழப்பத்துக்குள்ளாகியது அப்போது கணிசமான நம்பிக்கை புரிந்துணர்வு உடன்பாடு முறிந்து விடும் எனக் கருதப்பட்டது ஆனால், எல்லாவற்றையும் மீறி ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பை உருவாக்கியதுடன், கையெழுத்திடபுனர் வாழ்வு அமைச்சைப் பயன்படுத்திக் கொண்டார்.

• இதுவரையும் புரிந்துணர்வு உடன்பாடு முறியும் முறியுமென எதிர்பார்க்கப்பட்டதே அன்றி ஒரு போதும் முறியவில்லை. எல்லா சந்தர்ப்பத்திலும் முறியாமல் பாதுகாத்தது நோர்வே என்பதை மறுக்க முடியாது. எந்த ஊதியமும் இன்றி நோர்வே ஏன் உழைக்கவேண்டும்? அப்படி நோர்வேக்கு ஒரு இலாபமும் இல்லையா? என்பதெல்லாம் பிரதான கேள்விகளாகும்.

பொதுக்கட்டமைப்பை ஒருவாறு நிறைவேற்றிய நோர்வேயின் தூதுவர் புதுடெல்கியில் வைத்து பத்திரிகைக்கு அளித்த தகவலில் அவர் தெரிவித்தது - "பொதுக் கட்டமைப்பு வரலாற்று பூர்வமான உடன்படிக்கை" என்று எவ்வளவு பலவீனமான ஒரு மீள் கட்டுமானத்துக்கான சபையை வரலாற்று பூர்வமான உடன்படிக்கை எனக் கூறுவது எதற்கு என்பதே முக்கியமானதாகும். நோர்வேத் தரப்புக்கு அல்லது மேற்குலகத்துக்கு இது எப்படியான வரலாற்று நிகழ்வாகும்?

தமிழ் மக்களைப் பொறுத்த வரை பொதுக்கட்டமைப்பு ஏமாற்றுத்தனத்துக்கான இன்னோர் உடன்பாடாகவே தெரிகிறபோது, சர்வதேசம் அதனை வரலாற்று நிகழ்வாக நினைப்பது எதற்கென்பது தெளிவாக வேண்டும். உண்மையில் சர்வதேசம் போராட்டத்துக்கான ஓய்வு காலத்தை நீடிக்க விரும்புகின்றது. அமைதி, சமாதானம் உடன்பாடு என்றெல்லாம் காலத்தைக் கடத்திக்கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதியை முழுமையாக ஊடுருவி அதன் இயல்பான இருப்பைக் குழப்புவதாகும். இவ்வாறு பல விடுதலைப் போராட்டத்தை நெருக்கடிக்குள் தள்ளியவர்களே இங்கும் செயற்படுகின்றனர் என்பதை மறுத்து விட முடியாது. எனவே போரற்ற சூழலை நீடிப்பதில் நோர்வே - புதுடெல்கி - அமெரிக்கா என்ற வரிசையில் ஒரே நோக்கு நிலையே காணப்படுகின்றது. இதனால் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரலாமென சர்வதேசமும், பிராந்திய சக்தியும் கணக்குப் போட்டு செயற்படுகிறது.

புதுடெல்கி ஆரம்பத்தில் எதிர்த்த போதும் பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திடும் நிலைக்கு இணங்கியே இருந்தது. இது இந்தியாவின் இயலாமை என்பது ஒரு பக்கம் அமைய, மறுபக்கம் போரற்ற சூழலை நீடிப்பதன் மூலம் இந்தியாவுக்கும் அதிகமான நன்மைகள் உண்டு. தொடர்ந்தும் இந்தியாவின் சந்தையாக இலங்கையை வைத்திருக்கலாம், சேதுக் கால்வாயை சாத்தியப்படுத்தலாம். இவ்வாறு பல நோக்கங்களை அடைந்து கொள்ளலாம் என்பதையும் இந்தியா கருத்திற் கொண்டே பொதுக்கட்டமைப்புக்கு பச்சைக்கொடி காட்டியது.

இவ்வாறு சர்வதேசமும், இந்தியாவும் இலங்கையுடன் இணைந்து போடும் திட்டமிடல்கள் தெரியாத தொன்றல்ல. இதனை முறியடித்து மாற்றுத்திட்டங்களை முன்வைப்பதில் தமிழர் தரப்பு கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது போல் தெரிகின்றது. அதில் முழுவீச்சுடன் செயற்படுவதுடன் - சர்வதேசமும், புதுடெல்கியும், இலங்கையும் முன்வைக்கும் உபாயங்களையும் மீளவும் அவர்களுக்கே திருப்புவது பொருத்தப்பாடான அணுகு முறையாக தமிழர்தரப்புக்கு இருக்கும். அதனைத் தேர்ந்தெடுத்துப் பணியாற்றுவதும், பொதுக்கட்டமைப்பு அமுலாக்கம் பற்றி சிரத்தை எடுப்பதும் அவசியமான தொன்றாகும்.

எனவே சர்வதேச சமூகம் மீண்டுமொரு பரீட்சையை நிகழ்த்தி விட்டுச் சென்றுள்ளது. அது இயற்கை அனர்த்தத்தின் பெயரால் ஏற்பட்ட பரீட்சையாகும். இந்தப் பரிசோதனை மட்டுமல்ல - என்னும் பலபரீட்சைகளும் அதாவது உடன்பாடுகளும், இணக்கப்பாடுகளில் கையெழுத்திடப்படும் பணிகளும் தொடரவே சர்வதேசம் விரும்புகின்றது. காஸா - ஜெரிக்கோ - உடன்பாட்டை அமுல்படுத்த - "வைநதி உடன்பாடு" கைச்சாத்திட்டது போல், உடன் பாட்டை அமுலாக்க உடன்பாடு ஏற்படுத்துவதே சர்வதேசத்தின் உபாயமாகும்.

கல்வியியல்

ஆர்.கே.மேனன்

# பட்டதாரி நியமனத்தால் தீவக வலயத்தில் பாடரீதியான ஆளணித் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

மாணவர்களது கல்வி வளர்ச்சி வீதத்தில் மிகவும் மந்தமான நிலையில் இருக்கும் வலயங்களில் தீவக வலயமும் ஒன்று. இதற்குப் பல அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன என்பது பல ஆய்வு முடிவுகள் மூலம் தெளிவாகிறது. இதில் ஆளணி வளங்களோடு கூடிய ஆசிரியர் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. இது தற்போது தீவக வலயத்துக்காக ஒதுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனங்களால் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டது என்று அனைவரும் எண்ணி இருக்கின்றனர். ஆனால் இதைப் பாடசாலை நிர்வாக ரீதியாகப் பார்க்கின்ற போது, இந்தப் பட்டதாரி நியமனத்தில் போதிய திருப்தி ஏற்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மை.

தீவக வலயக்கல்விப் பணிப்பாளரின் தலைமையில் - வலயக் கல்விப்பணிமனையே இந்த ஆசிரியர்களை பாடசாலை ரீதியாகத் தரம் பிரித்தது. ஆனால் இந்தத் தரப் பிரிப்பு பாடசாலை ரீதியாக, பாடசாலைக்குத் தேவையான பாடரீதியான ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ததா? என்றால் அது பூரணமானதாக இடம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

உதாரணமாக - புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை எடுத்து நோக்கினால், தமிழ், அளவையியல் போன்ற உயர்தரப் பாடங்களுக்கு ஆசிரியர் தேவை. ஆனால் இதைக் கற்ற அல்லது கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் எவரும் இந்தப் பட்டதாரி நியமனத்தில் இல்லை. இதைவிட வயலின், மிருதங்கம், நாட்டியம் (நடனம்) போன்ற சிறப்புக் கற்கை நெறிப்பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய பாடங்கள் இங்கு இல்லாததால், இவர்கள் ஆங்கிலம், மற்றும் சுற்றாடல் சமூகக்கல்வி, ஆரம்ப நெறிப்பாடங்களைக் கற்பிக்கின்றனர். இதில் இரண்டு பிரச்சினைகள் தலை தூக்குகின்றன.

ஒன்று - குறிப்பிட்ட பாடம் சம்பந்தமான விசேட பயிற்சி பெறாமல் கற்பிப்பது, புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு மிகப் பாதகமானது.

மற்றையது - குறிப்பிட்ட ஆசிரியர்களுக்காக வழங்கப்பட்ட விசேட பாடம் சம்பந்தமான பயிற்சிகள் வீண் விரயமாகின்றன.

இதைவிட புவியியல், தமிழ் போன்ற பாடங்களில் விசேட கற்கை நெறிப் பயிற்சியை முடித்தவர்கள் - தேவையற்ற முறையில் ஆரம்பப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படியாக பாடசாலை ரீதியாக ஒரு சில ஆய்வுகளைச் செய்து பார்க்கின்ற போது, இது புலனாகின்றது. இதனால் இந்தப் பட்டதாரி நியமனங்கள் மூலம் போதியளவு பாடரீதியான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்று கூறமுடியாதுள்ளது.

இப்படியான பெருமளவு ஆளணிகளைக் கொண்ட பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்டும் கூட, கற்பித்தல் செயற்பாட்டில் போதியளவு வெற்றி கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட ஆழமான பிரச்சினைகள் வேரோடி இருக்கின்ற போது, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் போதியளவு வெற்றி கிடைக்கவில்லையே.. ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பட்டும் ஏன் அதற்கேற்ற வெளியீடுகள் இல்லையே.. என்று அங்கலாய்ப்பது அர்த்தமற்ற ஒன்று.

ஆளணிகளைத் தொகை ரீதியாக நியமித்து விட்டு, வெளியீட்டு வெற்றியை எதிர்பார்க்க இது ஒன்றும் உற்பத்திப் பொருள் அல்ல. தனித்தனி திறன்விருத்தியோடு சம்பந்தப்பட்ட பாட அலகுகளோடு கூடியது.

ஆகையால் இது தொடர்பாக குறிப்பிட்ட தீவக வலயக் கல்வி அதிகாரிகள் கவனமெடுத்து, பாடசாலை அதிபர்களிடம் இருந்து முதற்கட்டமாக பாடரீதியான தேவைப்பட்டியலைப் பெற்று, பின்பு பட்டதாரிகளினது பயிற்சிப் பாடங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஒரு உள்ளக இடமாற்றத்தை புதியபட்டதாரிகளுக்கு மேற்கொண்டால் மாத்திரமே இந்தப் பட்டதாரி நியமனம் எமது தீவக வலயக் கல்வித் தேவையின் அடிப்படையில் வெற்றியளிக்கும்.

இல்லையேல் இது ஒரு அர்த்தமற்ற ஆளணி நிரப்பல்களாகத் தான் இருக்கும். இதையடிப்படையாகக் கொண்டு கல்விவிருத்தியை எதிர்பார்ப்பது ஆற்றிலே போட்டுவிட்டு குளத்தில் தேடும் கதையாகத்தான் இருக்கும்.

### மாவீரர்களின் இலட்சிய கனவை வென்றெடுக்க

# தமிழ் மக்கள் தேசியத் தலைவரின் கரங்களை பலப்படுத்த வேண்டும்

## மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு



மட்டக்களப்பு

இனியும் அடிமைகளாக வாழக் கூடாது தமிழினம் வாழ்வதற்கென்று நாடு வேண்டும். அதற்காக பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர். அவர்களின் இலட்சியக் கனவை வென்றெடுப்பதற்குத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பங்காளிகளாக மாறி தேசியத் தலைவரை பலப்படுத்த வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மைதா னத்தில் நடைபெற்ற கரும்புலி கள்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில் -

இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்பாக இன்றைய தினத்தில் முழு இலங்கையையும் அதிரப் பண்ணும் படியாக ஒரு சம்பவம் நடந்தது. எமது விடுதலைப் போராட்டத்தில் கரும்புலி கப்டன் மில்லர் தனது வீரதீரச் செயலை மேற் கொண்டார்.

அந்தக் காலப்பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு யாழ்.குடாநாட்டைப் பிடிப்பதற்காக சிங்கள அரசு ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

அதன் முதல் கட்டமாக வடமராட்சி பகுதிக்கு இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டதுடன் இராணுவ முகாம்களையும் அமைத்தது. அப்போதுதான் எமது தலைவர் அந்த இராணுவ நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்காக பல உத்திகளைக் கையாண்டார். அந்த இராணுவ நடவடிக்கைகளை எப்படி தகர்த்தெறிவது எனத் திட்டமிட்டார். அப்போதுதான் கிளர்ந்தெழுந்தான் மில்லர். சிங்கள இராணுவத்தினரின் முகாமை தாக்கியழிக்க வேண்டும் என்ற திட்டம் தீட்டினார்.

திட்டப்படி வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட லொறியை ஆயத்தப்படுத்தி மில்லர் தனது இறுதிப் பயணத்தினை மேற் கொண்டார்.

நெல்லியடி இராணுவ முகாமை இலக்கு வைத்து தாக்குதலைத் தொடர்ந்தார் கப்டன் மில்லர். அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆரின் அரசாங் கம் அங்கலாய்த்தது. அப்போது இந்திய அரசினது உதவி நாடப்பட்டது. அந்தக் காலத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆனால், ஒன்றும் பலனளிக்கவில்லை. மீண்டும் யுத்தம் இந்திய இராணுவத்துக்கெதிராகவும் சண்டைகள் நடைபெற்றன. அவ்வாறான சூழ்நிலையில் தான் ஆகாய கடல் வெளிச்சமரும் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கரும்புலிகள் எமது விடுதலைப்போராட்டத்துக்குப் பெரும் வெற்றிகளை ஈட்டித்தந்தனர். இவர்கள் மூலம் இராணுவத்தினரின் நடவடிக்கைகள்பல தடுத்து நிறுத்தப்பட்டு அவர்களின் முன்னேற்றங்கள் சீர்குலைக்கப்பட்டன. படையினரின் நடவடிக்கையை முற்றிலும் தடுத்து நிறுத்தி அவர்களைக் கதிகலங்க வைத்தனர் இந்தக் கரும்புலிகள். இதுவரை காலமும் நடைபெற்ற விடுதலைப்போராட்ட வரலாற்றில் 263 கரும்புலிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

இவர்களுடைய அர்ப்பணிப்பு தமிழீழம். இவர்களுடைய கனவுகள் ஒருநாளும் வீண்போகக் கூடாது. அதற்கு மக்களாகிய நீங்கள் ஒத்துழைக்கவேண்டும். அணிதிரளவேண்டும் அத்துடன் எமது விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களாகிய நீங்கள் பக்கபலமாக நிங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

# திருமலையில் கரும்புலிகள்தின நிகழ்வு கடற்கரைச் சேனையில் இடம்பெற்றது

திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் கரும்புலிகள் நாள் பிரதான நிகழ்வுகள் கடற்கரைச் சேனை பொது மைதானத்தில் மிகவும் எழுச்சி பூர்வமாக நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது கனரக ஆயுதங்களின் பாவனைக் கண்காட்சியும், முகாம் ஒன்று தாக்கி அழிக்கப்படும் விதம் என்பனவும் மக்களுக்குத் தத்துரூபமாக நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டது.

மாதிரி காவலரண்கள் அமைக்கப்பட்டு அவை போராளிகளால் கனரக ஆயுதங்கள் மூலம் நிர்மூலமாக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து உந்துருளி விரைவு படையணியின் சாகசக் கண்காட்சியும் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளின்போது திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# இருநாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் கரிதாஸ் தேசிய சமாதானப் பேரவையின் செயற்திட்டத்தின்கீழ் இரண்டுநாள் பயிற்சிப்பட்டறை நாளை காலை 8.30 மணிக்கு யாழ் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது இந்தப் பயிற்சிப் பட்டறை மறுநாள் மாலை 3.30 மணிவரை நடைபெறும்.

இந்த இருநாள் பயிற்சிப் பட்டறையின்போது முரண்பாடுகளின் பகுப்பாய்வு, பொதுவான முரண்பாடு, ஏழுத்து மூலமான முரண்பாடுகளின் பகுப்பாய்வு, இலங்கை இனப் பிரச்சினைகளில் சரித்திர ரீதியான பின்னணி ஆகிய தலைப்புகளில் கருத்துரைகள் வழ்ங்கப் படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அரச அறிவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சமூகவியல்துறை விரிவுரையாளர் டொறின் அருளானந்தம் ஆகியோர் பயிற்சியை நெறிப்படுத்துவர்.

## ஆலோசனைக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்

நல்லூர் பிரதேச அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பிரதேச சபை செயலர் பொ.வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ளது. (63)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

யாழ் பல்கலைக்கழ ஊழியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களையும் பல்கலைக் கழக இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்று கூடுமாறு ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

# மட்டக்களப்பு அம்பிளாந்துறையில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. பிற்பகல் 5.30 மணியளவில் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மாணவர்களின் பாண்ட்வாத்திய அணியினரால் அதிதிகள் அம்பிளாந்துறை சந்தியிலிருந்து அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் பொதுக்சுடரினை தளபதி பிரபா ஏற்றிவைத்தார். பின்னர் தேசியக் கொடியினை மட்டு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஏற்றிவைத்தார்.

அடுத்து கரும்புலிகளின் மாவீரர் நினைவாலயத்தில் கரும்புலி மாவீரர்களுக்கு மட்டக்களப்பு மகளிர் படையணித் தளபதி சுகிர்தா மலர்மாலை அணிவித்தார்.

அதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் புண்ணியமூர்த்தி மாவீரர் திருவுருவப்படத்திற்கான சுடரினை ஏற்றிவைத்தார். பின்னர் மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தளபதி கேணல் பானு, தளபதி பிரபா, மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ், மட்டக்களப்பு மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அரிதாஸ், முதலீட்டுப் பொறுப்பாளர் ரொசான், மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள், அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கரும்புலிகள் நாள் நினைவை முன்னிட்டு பாடசாலை ரீதியாக தமிழீழ மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்ட ஓவியம், மற்றும் கவிதைப் போட்டிகளில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை கட்டளைத் தளபதி கேணல் பானு வழங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.

# புலிகளின் சிறப்புப் பயிற்சிக் கல்லூரியிலும் கரும்புலிகள் தின நிகழ்வு அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் சிறப்புப் பயிற்சிக் கல்லூரியில் கரும்புலிகள் தின நிகழ்வு நேற்று முன்தினம் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தேசியக் கொடியினை மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஏற்றிவைக்க, தேசியக் கொடிக்கான மலர்மாலையினை மாலதி படையணி துணைப்பொறுப்பாளர் வசந்தா அணிவிக்க கப்டன் மில்லர், கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜெயாத்தன், குடும்பிமலை கோட்ட தளபதி உமாராம், மாவடி முன்மாரிக் கோட்டத்தளபதி யோகராஜ் ஆகியோர் அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து கட்டளைத் தளபதி பானு சிறப்புரையாற்றினார். பின்னர் போராளிகள் மத்தியில் விளையாட்டுக்கள் நடத்தப்பட்டதுடன், இரவு நிகழ்வாக மாலை 7.15 மணியளவில் கரும்புலிகளுக்கான ஈகச் சுடரேற்றப்பட்டது. ஈகச் சுடரினை பயிற்சி ஆசிரியர் மணிவண்ணன் ஏற்றிவைக்க போராளிகளின் கவிதை, பேச்சு என்பன இடம்பெற்றது.

# இருவேறு விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்தனர்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற விபத்தின்போது பாடசாலை மாணவி உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

யாழ். மாநகர சபை உழவு இயந்திரம் வீதியில் நடந்து சென்ற பாடசாலை மாணவியை மோதியதால் பாடசாலை மாணவி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு நடைபெற்ற இந்த விபத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த மகேந்திரம் சாளினி (வயது10) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உழவு இயந்திரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், சாரதியும் யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, அரியாலையில் நேற்றுக்காலை 9 மணிக்கு நடைபெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் பாசையூரைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் (வயது38), கொழும்புத்துறையைச் சேர்ந்த துஸ்யந்தன் (வயது 12) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரி யவருகின்றது.







அம்பிளாந்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வுக்கு மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி பானு மற்றும் பிரபா உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் வருகை தருவதையும், தளபதி பிரபா ஈகச் சுடரேற்றுவதையும், கட்டளைத் தளபதி பானு தேசியக் கொடியேற்றுவதையும் படத்தி காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஐ.தே.கவின் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

கொழும்பு–

ஐக்கிய தேசிய கட்சி நடத்திவரும் ஜனபல மேஹுயும் பேரணியின் ஐந்தாம் நாளான நேற்றுக்காலை ஹிக்கடுவையில் ஆரம்பித்து பலப்பட்டியில் முடிவடைந்தது.

குறித்த பேரணியில் ஆயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றனர். கடந்த 2ஆம் திகதி தெவுந்துறையில் ஆரம்பமான இந்தப் பேரணியில் ஆரம்பம் தொடக்கம் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று வருகின்றனர்.

பேரணியின் மொத்தமுள்ள 174 கிலோ மீற்றர் பகுதியில் நேற்றுவரை 70 கிலோ மீற்றர் தூரம் கடக்கப்பட்டுள்ளது.

நேற்றைய பேரணியில் பங்கேற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் டியு குணசேகர 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படமாட்டாது எனக்குறிப்பிட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோது – தேர்தல் ஆணையாளரே ஜனாதிபதி தேர்தல் தொடர்பான திகதியை தீர்மானிக்கவேண்டும்.

அதனை விடுத்து டியு குணசேகர எப்போது தேர்தல் ஆணையாளரின் கடமைகளைப் பொறுப்பேற்றார் என்பது தெரியவில்லையெனக் குறிப்பிட்டார். இந்த விடயம்கூட அரசியல் அமைப்பு முறை அமைச்சருக்கு தெரியாமை வியப்பானது என்றும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலை நடத்துவதன் மூலமே நாட்டின் தற்போதைய ஸ்தம்பித நிலையைத் தவிர்க்கமுடியுமெ னக் குறிப்பிட்டார்.

## கடத்தப்பட்ட...

பதில் அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பான தகவல் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத் தப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனிமேலும் தமிழ்...

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய கேணல் சொர்ணம் -

விடுதலைப் புலிகளால் புதிய இடங்களை தாக்கியழித்து கைப்பற்றுவதென்பது இயலாத காரியம் இல்லை. அவ்வாறு தாக்குதல் நடத்தி இடங்களைக் கைப்பற்றினால் அவற்றைப் பாதுகாத்துக்கொள்வது உங்களது கடமையாக இருக்க வேண்டும்.

நாங்கள் வெறும் ஆயுதப் பிரியர்கள் அல்ல. ஆயுதங்களுடன் சண்டை பிடிப்பது பெரிய வேலை இல்லை. ஆயுதம் எமக்கோர் பிரச்சினை இல்லை. அது யார் கையில் இருப்பதென்பது தான் பிரச்சினை.

பதற்றம் வராமல் நாங்கள் மாற முடியாது. நிச்சயமாக ஏதோ ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும். உங்களை நீங்களே தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள் - வளப்படுத்திக் கொள்ளுங்கள். கிராமங்களைப் பாதுகாக்க நீங்களும் இறங்கி வரவேண்டும்.

இன்னொரு யுத்தம் ஏற்பட்டால் அது மிகக் கொடூரமாக இருக்கும். 3 வருடங்களாக இரு தரப்பாரும் போருக்குத் தயாராகிக்கொண்டுள்ளனர். இராணுவ ரீதியாக புலிகள் பலமாக இருக்கின்றனர். மக்கள் இனியும் அவலங்களைச் சந்திக்கக்கூடாது. மக்களின் பின்னால் விடுதலைப் புலிகளின் தலைவரும் புலிகளும் இருக்கின்றனர். அவர்கள் மக்களின் சொந்த உறவினர்கள். ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் மக்கள் இருக்க வேண்டும் எனவும் கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

## சிங்களக் காடையர்...

பற்றுவதற்காக வந்திருந்த தமிழ் மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு போட்டியின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். மாணவர்கள் வெளியேறியதையடுத்து போட்டிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்தனர்.

போட்டி இடைநிறுத்தப்பட்டமையை ஆட்சேபித்து சிங்களக் காடையர்களும், சிங்கள ஆசிரியர்கள், மாணவர்களும் மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு நின்றிருந்த தமிழ் காவலாளி ஒருவர் தாக்கப்பட்டார். அத்துடன், மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம்மீது கற்கள் வீசி கண்ணாடிகளை உடைத்துச் சேதமாக்கினர்.

தமிழ்க் காவலாளி தாக்கப்பட்ட போதும்சரி, அலுவலகம் சேதமாக்கப்பட்டபோதும் சரி அங்கு நின்றிருந்த பொலிஸார் அதனைக் கட்டுப்படுத்தவில்லை.

இதன்பின்னர், போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் ஐந்து பேரை அழைத்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பேச்சுக்களை நடத்தினார்.

அதன்போது அவர்கள் – இலங்கை சிங்கள பௌத்த நாடு. இங்கு சிங்கக் கொடி ஏற்றப்படவேண்டும். அதனை ஏற்றாதுவிடக்கூடாது எனத் தெரிவித்ததுடன், இலங்கையர் தேசியக் கொடி ஏற்றாது எந்த நிகழ்வும் நடத்தக்கூடாது என்றும், இடைநிறுத்தப்பட்ட போட்டியைத் தொடர்ந்து நடத்துமாறும் கோரியிருந்தனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் போட்டி நடைபெற்ற இடத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழலையடுத்து – மாணவர்களை சொந்த இடங்களுக்கு திருப்பிவிட்டார்.

அத்துடன், போட்டிகளைத் தொடர்ந்து நடத்தமுடியாது எனத் தெரிவித்த அவர், மாவட்ட மட்டப் போட்டியில் தெரிவானவர்களை மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமெனத் தெரிவித்ததையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (10)

MCSU
யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீட மாணவர்ஒன்றியம் நடாத்தும்
தொழில் சார் கற்கை நெறிகளின்
வழிகாட்டல் கருத்தரங்கு
(A/L) பரீட்சையின் பின் உங்களின் எதிர்காலம் எப்படி?
விடை தேட விரையுங்கள்!
இடம் : யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம்
காலம்: 09-07-2005 (சனி) காலை 10.00 மணி
அனுசரணை Career. Com Institute
167, 1st Cross Street Jaffna.

## மல்லாவி விபத்தில் பல்கலை மாணவன் பலி

மல்லாவி–

மல்லாவிப் பகுதியில்இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் வயம்ப பல்கலைக்கழக மாணவரொருவர் பலியானதுடன் – மேலும் இரு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் மல்லாவி – மாங்குளம் பிரதான வீதியில் வடகாடு எனும் இடத்தில் இடம்பெற்றது.

மேற்படி மாணவர்கள் மூவரும் வீதியில் பயணித்த கார் பாதையை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதாகத் தெரியவருகிறது. கார் உரிமையாளரான வயம்ப பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் சிவஞான சுந்தரம் கஜீபன் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார். விபத்தில் காயமடைந்து மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் உயிரிழந்துள்ளார்.

காரைச் செலுத்திய சக மாணவனான பற்குணராசாள சபேசன் (வயது 27) என்பவரும் மற்றைய மாணவரான சுந்தரலிங்கம் சுரஞ் சன் (வயது 28) என்ற மாணவனும் காயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுமுறைக்கு மல்லாவியிலுள்ள தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டு கொழும்பு திரும்புகையிலேயே இந்தச் சம்பவம்இடம்பெற்றுள்ளது.

## 2 ஈழத் ...

சிவராசனுடன் லிங்கம் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளார். அத்துடன் ராஜீவை கொல்லவந்த 9 பேரையும் 1991 ஆம் ஆண்டு லிங்கம்தான் மே முதலாம் திகதி கோடிக்கரையில் வரவேற்றுள்ளார். ராஜீவ் கொலைக் குப்பின் சிவராசன், சுபா, நேரு ஆகியோர் பெங்களூரில் தங்க வசந்தன் ஏற்பாடு செய்துள்ளார். எனவே அவர்கள் இருவரது விடுதலைக்கும் அனுமதிக்கக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட மேற்படி இருவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படாததால் இவர்கள் இருவரும் செங்கல்பட்டிலுள்ள இலங்கை அகதி முகாமில் காவலில் வைக்கப்பட்டனர்.

இதை எதிர்த்து இருவரும் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்ததுடன் தங்களை இலங்கை செல்ல அனுமதிக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தனர். இந்த மனுவை விசாரித்த மேல்நீதிமன்றம் இருவரையும் விடுதலை செய்து இலங்கை செல்ல அனுமதிக்கும்படி உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புலனாய்வு...

முன்பாக நேற்றுக்காலை 11.25 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் சார்ஜன்ட் எம்.ஓ.எல். ரபிடீன், கொன்ஸ்டபிள் டி.ஜி.கபிலசிறி ஆகியோர் படுகாயமடைந்தனர். உடனடியாக இவர்கள் கல்முனை அஷ்ரப் நினைவு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு – ஆபத்தான நிலையில் இருந்ததால், ஹெலி மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

எனினும், கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டபோது – வழியில் கொன்ஸ்டபிள் கபிலசிறி உயிரிழந்தார். சார்ஜன்ட் ரபிடீன் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினரும், பொலிஸாரும் சம்பவ இடத்தில் தேடுதல் நடத்திய போதும் 9 மீ.மீ. பிஸ்டல் ரவைகள் 10 கண்டுபிடிக்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

## இந்தியாவில்...

ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் படகுகள்மூலம் தாயகம் திரும்பிவருகின்றனர். இவ்வாறு வருகின்ற மக்கள் தமது பயணத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு அகதிகளைக் கப்பல் மூலம் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருங்கிச் செயற்படவுள்ளோம்!

### ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சந்திரிகா

கொழும்பு–

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி. விலகிய பின்னர் – சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல முடிகிறது. வருங்காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருங்கிச் செயற்படவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி. வெளியேறியதை அடுத்து அந்த முன்னணியின் நான்கு அமைச்சர்களும் நான்கு பிரதியமைச்சர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

அவர்களின் பதவி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும். அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள், பிரதி அமைச்சர்களிலிருந்தே தெரிவுசெய்யப்படுவார்கள்.

தற்போதிருக்கும் அமைச்சர்களில் சிலர் செயற்பாடற்றிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதால், இந்த அமைச்சுக்களுக்கு பிரதியமைச்சர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நியமிக்கப்படுவர்.

தேசிய பிரச்சினை சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உள்ளதால், இரு கட்சிகளும் ஒன்றிணைந்து நெடு நாட்களுக்கு செயற்பட முடியாதென்பதை அறிந்தும் நான் இந்தக் கூட்டணிக்கு சம்மதிக்கக் காரணம் – கட்சியினுள் இருந்த சிலர் விடுத்துவந்த அழுத்தமே.

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி. விலகிய பின்னர் சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல முடியுமாக இருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வருங்காலத்தில் மிக நெருக்கமாகச் செயற்படவுள்ளோம்.

வெகுவிரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படும். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 15 மாதங்கள் உள்ளதால், அது குறித்து யாரும் இப்போது குழம்பிக் கொள்ளத் தேவையில்லை. அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு அனைவரும் தயாராக இருக்கவேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் விரைவில் பெரும் மக்கள் தொகையுடன் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவேண்டும்.

கடந்த அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு அவசரமாக தேர்தலுக்குச் செல்லுமாறு ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலருமே அழுத்தம் கொடுத்தனர்.

ஜே.வி.பியின் உறுப்பினர்கள் – அமைச்சர்களாக பதவி வகித்தபோது அவர்கள் பற்றி எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. விரைவில் அந்த முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்படுமெனவும் ஜனாதிபதி மேலும் கூறினார். (தே)

## சுதந்திர தமிழீழத்தை...

குறிப்பிட்ட கருத்து நிலைக்குச் சான்றாக, இன்று தமிழினம் சொந்தக் காலில் தம் விடுதலையைப் பெற்றுவிடும் உறுதியுடன் நிற்பதற்குக் காரணமாக இருக்கும் உயர்ந்த இன வலிமையை உருவாக்கித் தந்த கரும்புலி வீரர்களின் நினைவுநாள் இது.

கரும்புலி வீரர்கள் – தமது தேசத்திற்காக தமது உயிர்களை ஈந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அவர்களைத் தெரியாதவர்கள் – அவர்களை கடும் மனம் படைத்தவர்களாக எண்ணுவதுண்டு. ஆனால், உண்மை அதுவல்ல.

சாதாரண மனிதர்களைவிட மெல்லுள்ளம் படைத்தவர்களாக வாழந்தவர்கள் அவர்கள். பொதுவாக எல்லா மனிதர்களைப் போலவே உயிர் வாழ்வதற்கான தேவையும் விருப்பமும் கரும்புலிகளுக்கும் உண்டு.

ஆனால், தம் தேசத்தின் மீதும் தாம் பெற்றுக் கொண்ட கடமையின் மீதும் அவர்கள் கொண்ட உறுதிப்பாடு, வாழ்வதற்கான அவர்களது விருப்பத்திற்கு மேலாக தமது கடமைக்காக உயிர் கொடுப்பதற்கான உறுதியை அவர்களுக்குத் தருகின்றது.

கரும்புலி வீரர்கள், தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும், தேசியத் தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டுச் சென்றதைக் கண்டிருக்கிறோம்.

அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று, தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்தக் கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையும்.

கரும்புலி வீரர்களின் ஒவ்வொருவரது பிரிவின் போதும் அவர்களால் கிடைத்த வெற்றியால் ஒருபுறம் வெற்றிப் பெருமிதத்துடனும், மறுபுறம் தனது வீரர்களது பிரிவின் ஆற்றாமையோடும் உள்ள மனநிலையோடு தலைவர் இருப்பதைக் கண்டுள்ளேன்.

கரும்புலி வீரர்கள் ஒவ்வொருவரினது இழப்பும், பிரிவும் எல்லோருக்கும் மனச்சுமையை ஏற்படுத்தும் ஒன்றுதான். ஆனால், தேசவிடுதலையின் தவிர்க்கமுடியாத தேவையாக அந்த மாவீரர்களின் பணி அமைந்துள்ளது.

கரும்புலி வீரர்களின் சேவை – தேவையான ஒன்றாக இருக்கிறது. தமிழீழத் தேசியத்தின் தடைகளை அகற்றி விடுதலையை விரைவுபடுத்துவதற்கு கரும்புலிகள் அர்ப்பணம் அவசியமான தொன்றாகிறது.

அந்த அர்ப்பணிப்பில் மனந்திறந்த நிலையிலே கரும்புலிகளை நினைவுகூரும் நாம் இன்று ஒரு விடயத்தில் உறுதிகொள்ளவேண்டும். கரும்புலிகளின் தற்கொடையால் வரும் வெற்றிகளை, நல்ல தொழில்நுட்ப வளத்தாலும் நல்ல இராணுவ பலத்தாலும் அவற்றைப் பெறுவதற்கான பொருளாதார வளத்தாலும் ஈட்டமுடியும். அதையீட்டுவதில் உலகிலுள்ள தமிழரெல்லோரும் தமிழ்த் தேசியத்தின் பின்னே அணிதிரள்வதற்கான உறுதியை கரும்புலிகள் நாளில் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.